நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்

# நான்

மலர் 9

உளவியல் மஞ்சரி இதழ்: 6

கார்த்திகை — மார்கழி



1983

## இலட்சியம்

2/25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்:

வின்சன்ற் பற்றிக் O.M.I.,B.A.

இணை ஆசிரியர்:

ஜீவா போல் O.M.I., B.Th.

துணை ஆசிரியர்:

ஸ்ரனி அன்ரனி
மங்களா
பீற்றர்
ஜீவன தாஸ்

தொடர்பு:

F. L. N. குரூஸ்
வீனஸ் சொய்ஸா

விளம்பரம்:

செபஸ்ரியன்

விநியோகம்:

நீக்கிலஸ்

ஆலோசகர்:

வண. E. யேசுதாசன் O. M. I.
வண. H. ஜெபநேசன் M. A.
வண. M. போல் O.M.I.,B.Th.
வண. J. லம்பேட் O. M. I.

முகவரி:

"நான்"
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

அடுத்து வெளிவருகின்றது!

# சிறப்பிதழ்

உங்கள் ஆக்கங்களை
உடனே அனுப்பி வையுங்கள்

இவ்விதழில்

- இலட்சியம் இன்றியமையாதது (கட்டுரை)
- முடிவுகள் மாற்றப்படலாம் (கட்டுரை)
- பார்க்காத பக்கங்கள் (சிறுகதை)
- இலட்சியவாதிகள் பாரீர் பாப்பா! (கவிதை)
- விமர்சனத்திற்கு விமர்சனம்!

கருத்துக் குவியல் இல. 30

"'நான்' சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது."

உங்கள் கருத்துக்களை சார்பாகவோ அல்லது எதிராகவோ எழுதி தை 5ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஈராண்டு சந்தா | ரூ. 28-00 |
| ஓராண்டு சந்தா | ரூ. 15-00 |
| தனிப்பிரதி | ரூ. 2-25 |

பணம் பெறும் கந்தோர்:
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர்வு உனதே!

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அண்ரு கார்ணிஜி கூறுகின்றார். எதிர்காலத்தில் நம்பிக்கை, வளைந்துகொடுக்கும் இயல்பு, விரைவாகத் தீர்மானத்துக்கு வரும் எண்ணம், புன்னகை செய்யும் முகம் என்பவையாகும். பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுதல், வெற்றியில் வெறிகொள்ளாமலும் தோல்வியில் சோர்ந்து வீழாமலும் வாழுதல், திறன்களை விருத்திசெய்தல், பிறரது திறமைகளைப் பாராட்டி பெருமனத்தோடு வாழுதல் போன்றவை பெருமகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் விழுதுகளாகும்.

வாழ்க்கையில் வளம்பெற, ''இப்பொழுது சிறு விஷயங்களைச் செய். நாளடைவில் பெரிய விஷயங்கள் உன்னை நாடி நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும்'' என்று பாரசீக பழமொழி கூறுகின்றது. சிறு விஷயந்தானே என்று அலட்சியப்படுத்தாது சிறு விஷயங்களையும் சிறப்பாகச் செய்வதன் மூலமாக நிறைவுபெறலாம். எளிய காரியமாயினும் சரி, பெரிய சாதனையாயினும் சரி, அது உள்ளத்தின் நிறைவினின்றே எழுவது அவசியமாகின்றது.

வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகளை நாம் எப்படி ஏற்றுக்கொள்கின்றோம் என்பதில்தான் மகிழ்ச்சி தங்கியுள்ளது. ''வாழ்க்கையின் வெயிலில் கொஞ்சம் காய்ந்தும் மழையில் கொஞ்சம் நனைந்தும் வந்ததால் எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கிறது'' என்கிறார் லாங்பெல்லோ. ஏமாற்றங்கள், பிரச்சனைகள் ஏற்படும்போது அவற்றிலிருந்து தப்பி ஓட முற்படாது அவற்றை எதிர்கொண்டு வெற்றி கொள்வதே வாழ்க்கைக்குப் புதுத்தென்பைக் கொடுக்கும்; வாழ்வில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தும். பிறரன்பு, இறை சிந்தை, கனிவு, கருணை, கரிசனை போன்றவை உள்ளத்துக்கு உரமாக அமையும் பொழுது உள்ளம் உவப்படையும்; உலகும் உயர்வடையும்.

— ஆசிரியர்

JAFFNA MEDICAL MUSEUM
TEACHING HOSPITAL JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியம் இன்றியமையாதது!

ஜே. எஸ். ஜீவனதாஸ் பெர்ணண்டோ
யாழ். பல்கலைக் கழகம்

மனித வாழ்வின் எண்ணங்களும் சிந்தனைகளும் தான் இலட்சியத்தினை ஏற்படுத்துகின்றனவா அல்லது இலட்சிய வாழ்வினால்தான் எண்ணங்களும் சிந்தனைகளும் மாற்றம் பெறுகின்றனவா என்ற கேள்வி ஒரு புறமிருக்க வாழ்வின் இலட்சியம் அல்லது குறிக்கோள்கள் எல்லாம் நிகழ்காலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுவன அல்ல என்பதை புரிந்து கொள்ளல் வேண்டும். மாறாக இவையாவும் இறந்த காலங்களின் அடிப்படையிலும், எதிர் காலங்களின் எதிர்பார்ப்புகளிலுமே அமைக்கப்படுகின்றன. நாம் இருக்கும் இக்காலத்தை நிகழ்காலமாகக் கொண்டால் எம்க்கு இறந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பு; இனிப்பு உணர்வுகளுக்கும் அந்த ரீதியில் பெறப்பட்ட சிந்தனைகளுக்கும் உருவம் கொடுக்க முயற்சிப்பதே இலட்சியமாகும். இங்குகூட இறந்தகால சிந்தனை செயல்களினூடாக எதிர் காலத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் நோக்கத்தோடு இவை காணப்பட்டாலும் அதற்குரிய அடித்தளம் நிகழ்காலத்திலேயே இடப்படுகின்றது.

**உணர்வற்ற நிலையின் முடிவு:-**

உணர்வுகளின் அடிப்படையிலேயே இலட்சியங்களின் தன்மையும் தாற்பரியங்களும் மாறுபடுகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட உணர்வுகள் காணப்படுவதால் அவன் தன்னளவில் தனிப்பட்ட இலட்சியங்களை வைத்திருக்கின்றான். ஆனால் இவை சரியான பாதையில் அமைக்கப்பட்டிருக்கின்றதா என்பதை ஒவ்வொருவனும் கவனித்தல் வேண்டும். அதற்கு ஒவ்வொருவனுக்கும் உணர்வற்ற நிலை காணப்பட வேண்டும். இங்கு உணர்வற்ற நிலை என்று கூறும் போது விருப்பு வெறுப்பு அற்ற நிலையைக் குறிக்கின்றது. ஏனெனில் ஒரு இலட்சிய போக்கு எந்த வேளையில் எடுக்கப்படுகின்றது என்பதை வைத்தே அதன் முடிந்த தன்மை பெறப்படும். ஒருவனுக்கு கோபம் உச்சக்கட்டமாக இருக்கும் போது 'நான் இதைச் செய்து முடிக்க வேண்டும்' என்று கொள்ளும் முடிவு ஒரு சிறந்த முடிவல்ல. ஏனெனில், கோபம் முதல் கட்டத்தில் வென்றது போல் தோன்றினால் அது நிரந்தரமாக தோல்வியைத் தழுவப்போகிறது என்று பொருள்படும். ஆகவே கோப உணர்வு கொண்டிருக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதுபோன்ற ஏனைய உணர்வுகள் இருக்கும்போது வழி வகுக்கப்படும் இலட்சியங்கள் தோல்விக்கான நிரந்தர படிகளாகும்.

**தனிமனித சமூக இலட்சியம்:-**

இலட்சியத்தினை தனிமனித இலட்சியம், சமுதாய இலட்சியம் என்று வேறுபடுத்தலாமா? முடியும் என்றே தோன்றுகிறது. தனிமனித குறிக்கோள்கள் சுயநோக்கோடு அணுகப்பட்டாலும் இறுதியில் அவை அவனை ஒரு சமூக மனிதனாக மாற்றுவதிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் தனியார்கள் பல சேர்ந்துதானே சமுதாயம்! அதுபோல தனிமனித இலட்சியங்கள் பல சேர்ந்ததுதானே சமூக இலட்சியங்கள். ஆனால் இலட்சியங்களின் தன்மைகளில் இருந்துதான் அது சமூகத்தால் அங்கீகரிக்கப்படுகின்றது. அவை ஏற்றுக்கொள்ள முடியாத இலட்சியங்களாக இருந்தால் சமூதாயத்தால் ஒதுக்கிவைக்கப்படுகின்றது.

**இலட்சியங்களின் பூரண தன்மை:-**

ஒரு இலட்சியத்தின் பூர்த்தி தான் செய்ய நினைத்த செயற்பாட்டை பூர்த்திசெய்வதில்தானா தங்கியுள்ளது? அப்படியல்ல! இதய சுத்தியோடு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அதன் மூலம் நிறைவேற்ற எத்தனித்த செயல்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கலாம். அதை நிறைவேற்ற முன்பு அதற்காக இறக்க நேரிடலாம் அல்லது அடித்து நொறுக்கப் படலாம். அப்படி இருக்கும்போது அவனது இலட்சியங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று கூற முடியாது. குறிப்பிட்ட ஒரு காலத்தில் இவை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் பின்னொரு காலத்தில் தனிப்பட்ட அவனது தீர்மானங்கள் சமூக இலட்சியங்களாகவும் இலக்கணங்களாகவும் அவையே ஆக்கப்படும். அப்படி ஆக்கவும் பட்டுள்ளன. ஆகவே ஒருவனது இலட்சியப்போக்கு தூய்மை நிறைந்து பயன் உடையதாய் இருப்பின் அது பிற்காலத்தில் இன்னொருவனால் பூரணப்படுத்தப்படும். ஆகவே எடுக்கப்படும் எண்ணங்கள், தீர்மானங்கள் மனதின் விருப்பு வெறுப்பற்ற நிலையில் இருந்து பெறப்படுவது அவசியமாகும்.

**இலட்சியமும் உண்மையும்:-**

தனிமனிதனுக்கு மாறுபட்ட உணர்ச்சிகள் காணப்படுகின்றன என்றும் மாறுபட்ட இலட்சியங்கள் காணப்படுகின்றன என்றும் நாம் ஏற்கனவே அறிந்து கொண்டோம். ஆனால் இப்படி தனிமனித இலட்சியங்கள் பல பெறப்பட்டால் சமூகத்திற்கான ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தினை எப்படி பெறலாம் என்ற கேள்வி எழலாம். மாறுபட்ட உணர்வுகளைகொண்ட பலமனிதர்கள் காணப்படாவிடில் அங்கு மோதல் என்பது இல்லாமல் போய்விடும். மோதல் இல்லாவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்பது இல்லாமலே போய்விடும். ஆகவே தனிமனிதனின் மாறுபட்ட உணர்வுகள் இறுதியில் உண்மையின் வடிவத்தை பூர்த்தி செய்யும். அதன் மூலம் இறுதி நிலை எமக்கு கிடைக்கும்.

**இலடசியமும் மனித உரிமையும்:-**

தன் உரிமைக்காக போராடுவது சுயநலமா? இல்லை அதுவும் ஒருவகை இலட்சியமேயாகும். ஏனெனில் உரிமையை இழப்பதை விட மனிதன் காட்டுமிராண்டி ஆவதே மேல். காரணம் முன் அதுவே வெப்பமும் மழையும், னேற்றத்திற்கு உரிமையே உயிர் அதுவே காதல், அதுவே இன்பம். அப்படியாக உரிமையை பெற நினைப்பதே இலட்சியத்தின் ஆரம்பப்படி. அதனை அடைவதே அதனது இறுதிப்படி. ஆகவே இங்கு சுயநலம் இதனுள் கலந்து இருந்தாலும் அது பொது நலனுடன் சேர்ந்திருப்பதனல் அதனையும் இலட்சியம் என்று வரையறுக்கலாம். ஆனல் முன்பு கூறியது போல உரிமையின் தன்மையும் அதனைப் பெற தீர்மானித்திருக்கின்ற முறையையும் இதய சுத்தியோடு ஆராய்ந்தபின்பே இயக்க வேண்டும். இப்படியான நிலையில் இதற்காக பலர் கொல்லப்பட்டாலும் அவர்கள் சென்ற பாதைகள் செயற்பாடுகள் மக்கள் மனதினில் சிந்தனை ரீதியான உணர்வுகளை ஏற்படுத்தினல் அதுவே அவர்களது வெற்றியாகும்.

மனிதனின் தரம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது? ஒருவன் வசிக்கிற அந்தஸ்து, சூழ்நிலை என்பவற்றினலா? இல்லை குலம், கல்வி என்பவற்றினலா? இல்லவே இல்லை! ஒருவனின் தரம் அவனது மனம், ரசனை, வாழ்க்கை என்பவற்றை தீர்மானித்துப்பெற்றுள்ள இலட்சிய வாழ்க்கையினலேயே தீர்மானிக்கப்படுகின்றது ஏனெனில் இவன் பெற்றுள்ள தீர்மானங்கள் அதன் மூலம் அவன் அடைய எத்தனித்த இலட்சியத்தினல்தான் அவன் சமுதாய வாழ்க்கைக்கும், உலகுக்கும் அர்த்தம் கற்பிக்கின்ருன்.

இறுதியாக, இந்த பரந்த உலகில் எத்தனை ரக மனிதர்கள். அதுவும் அவர்களின் சிந்தனைகள் ஏக்கங்கள் அபிலாசைகள் ... ... இப்படியாகப்பல. அவற்றை எம்மால் சிந்திக்க முடிகிறதா? ஆனல் இங்கு நாடுகளையும் கண்டங்களையும்தான் உலகம் என்று கூறமுடியாது. ஒவ்வொரு மனிதனும் ஒரு உலகம்தான். ஏனெனில் எவ்வளவுதான் நெருக்கமுற்று உறவு பெற்று ஒருவர் போல் ஒருவர் வாழ முயன்ருலும் உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒரு உலகம் தான். ஆக இந்த தனி மனிதர்கள் பல சேர்ந்து சமுதாயத்திற்கான ஒரு பொது இலட்சியத்தினை வகுப்பதிலும் இதனை மக்கள் ஏற்றுக்கொள்வதிலுமே இலட்சியத்தின் சிறப்பு தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுகள் மாற்றப்படலாம்

க. பீற்றர்
சாவகச்சேரி

எமது சொந்த வாழ்வு சம்பந்தமானவை, பிறர் சார்ந்த விடயங்கள், சம்பவங்கள் என வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் பல முடிவுகளை எடுக்கின்றோம். எமது வாழ்வில் வெற்றியும், தோல்வியும்; மகிழ்ச்சியும் துயரமும் அவ்வப்போது எம்மால் எடுக்கப்படும் முடிவுகளிலேயே பெரிதும் தங்கியுள்ளன. ஆதலில் சரியான முடிவுகளை எடுப்பது அவசியமாகின்றது.

## சொந்த வாழ்வு:

சிறு பிள்ளையாக இருக்கும் போது எமது விடயங்களில் பெற்றோர், சகோதரர் போன்றோர் முடிவுகளைச் செய்கின்றனர். எந்தச்சிறுவர்பாடசாலையில் எம்மைச் சேர்ப்பது — எத்தனை மணிக்கு நீராடுவது — சேர்ட்டின் கைநீளமாக இருக்கவேண்டுமா? அரைக்கை போதுமா என்றெல்லாம் அவர்களே தீர்மானிக்கின்றனர். அதன்படி நாம் செயற்பட்டோம். ஆயினும் அத்தகைய சந்தர்ப்பங்களிலும் நாமாகவே சில முடிவுகளைச் செய்யும் எண்ணம் தலைகாட்டுவதுண்டு. எமக்குப் பிடித்த உணவு — உடையை நாம் விரும்பிப்பெற முற்படுகையில் யாராவது குறுக்கிடின் அழுகையும் அடம் பிடித்தலும் ஏற்படுவதுண்டு. ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்ததும் பல முடிவுகளை நாமே செய்து கொள்ள முயல்கின்றோம். மற்றவர்களின் ஆலோசனையைப் பெற்றாலும் அவற்றைச் சீர்தூக்கியாராய்ந்து இறுதி முடிவினை நாம் செய்யவே விழைகிறோம். எத்துறை சார்ந்த கல்வி பெறவேண்டும். — வாழ்வின் இலட்சியமென்ன — திருமணம் செய்வதாயின் எத்தகைய துணையைத் தெரிதல் வேண்டும். இப்படியான முக்கிய காரியங்களில் மட்டுமல்ல. தலைவாரும் விதம், உடையணிதல் போன்ற சிறிய விடயங்களிலும் எனக்காக மற்றவர் முடிவெடுப்பதனை நாம் அவ்வளவாக விரும்புவதில்லை. ஆயினும் விதிவிலக்கானவைகளுமுண்டு. உ+ம்: கணவன் விரும்பும் நிறச் சேலையை மனைவியணிவது, விரும்பாத திரைப்படமாயினும் நண்பனுக்காக அப் படத்திற்குச் செல்வது ஆகியன. எமக்கு மிகவும் வேண்டியவர்கள் நெருங்கியவர்களின் காரியங்களைச் சில சமயங்களில் எமது சொந்த விடயங்களாகக் கருதிச் செயற்படுவதுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### பிறர் சார்பான விடயங்கள்

நம்மோடு பழகுபவர்கள் பற்றி நாம் கொஞ்சமாகவோ, அதிகமாகவோ — சரியாகவோ, பிழையாகவோ ஏதோ தெரிந்துள்ளோம். அதன்படி அவர்களைப் பற்றி முடிவு செய்திருக்கிறோம். ஒரு மாணவனுக்கு நற்சான்றிதழொன்றை எழுதும் அதிபர் அவனைப் பற்றி ஒரு முடிவைக் கொண்டுள்ளார். தீர்ப்பு வழங்கும் நீதிபதி வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள்பற்றி ஒரு முடிவுக்கு வந்து விட்டார். ஒருவருடன் நட்பை ஆரம்பிக்கும் போது அவரைப் பற்றிமுழுமையாக எமக்குத் தெரியாவிட்டாலும் ஒரு நல்லஅபிப்பிராயம் இருக்கிறது. இந்த அபிப்பிராயத்தை ஒரு தற்காலிக முடிவெனக் கூறலாம். அவருடன் தொடர்ந்து பழகுகையில் இந்த அபிப்பிராயத்தில் மாறுதல் ஏற்படலாம், அல்லது உறுதியாகலாம். மற்றவரைப் பற்றிய எமது முடிவுகள் மாறுதலடையும்போது உறவுகள் வலுவடைகின்றன அல்லது தளர்வடைகின்றன. சில சமயத்தில் முற்றுகவே அறுந்து விடுவதுமுண்டு. மற்றவர்களைப் பற்றி முடிவு செய்தல் என்னும் போது நாம் பழகும் ஒவ்வொருவரைப் பற்றியும் ஒரு அறிக்கையொன்றைத் தயாரித்து வைத்துள்ளோம் என்றர்த்தமல்ல. அம் முடிவு நம் மனதின் ஒருமூலையில் இருந்து கொண்டு அவருடன் பேசும்போதும் அவரது செயல்களை மதிப்பீடு செய்யும் போதும் துணையாகவோ இடையூருகவோ அமைகிறது. நம்மோடு பழகுபவர்களைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது எனக்கூறுவோமாயின் அது பொய்யாகும். நாம் அவரைப் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயத்தை வெளியிட விரும்பவில்லை என்பதே இதன் கருத்து. மனிதர்கள் ஒருவரோடொருவர் பழகுவதைக் கொண்டு அவர்கள் ஒருவரொருவரைப் பற்றி எவ்வித கணிப்பினைக் கொண்டுள்ளனர் என ஒருவாறு ஊகிக்க முடியும்.

#### சம்பவங்களும் ஏனைய விடயங்களும்

உலகெங்கும் இடம்பெறும் பல்வேறு சம்பவங்களையும் மாற்றங்களையும், ஒழுக்கம், நாகரீகம், கடவுள் நம்பிக்கைபோன்ற விடயங்களில் நாம் கொண்டுள்ள கருத்துக்களையும் இத் தலைப்பின் கீழ் ஆராய்வோம். சம்பவங்களுக்கு உதாரணமாக லெபனுனில் அமெரிக்க தாக்குதல்களையும், நம்நாட்டில் கடந்தமாதம் இடம்பெற்ற கொடுமைகளையும், தென் கொரிய விமானத்தை ரஷ்யா சுட்ட விடயத்தையும் கூறலாம். இவ்விடயங்களை நாம்அறிய வரும் போது விமானம் சுடப்பட்டது சரியா? தாக்குதல் நியாயமானதா? வன் செயல்கள் ஏன் ஏற்பட்டன? போன்ற வினுக்களை நமக்குள்ளே எழுப்பி அதுபற்றி நமக்குக் கிடைத்த செய்திகளின் அடிப்படையில் ஒரு முடிவுக்கும் வந்து விடுகிறோம். இம்முடிவினை நாம் எடுப்பதற்கு அமெரிக்கா, ரஷ்யா, யூ. என். பி. அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நாம் ஏற்கனவே கொண்டுள்ள அபிப்பிராயங்கள் உதவுகின்றன.

**முடிவுகளின் அவசியம்**

சமுதாயத்தின் அங்கமான மனிதன் சொந்த வாழ்வு பற்றியும் பிறர் பற்றியும், சம்பவங்கள் ஏனைய பிற விடயங்கள் ஆதியன பற்றியும் முடிவுகளைச் செய்வதில் இருந்து ஒதுங்கிவிட முடியாது. ஏதோ ஒரு முடிவினை எடுக்க இயலாதவனைத் தைரியமற்றவன் அல்லது ஏதோ நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவன என்றே கூற வேண்டும்.

"அந்தப் படம் சரியில்லை" "இந்தத் துணி அதிக நாள் பாவிக்காது", "அது ஒரு நல்ல குடும்பம்" "சீதனம் கேட்காமலே கல்யாணம் செய்யப்போகிறேன்" "வெலிக்கடையில் கைதிகள் கொல்லப்பட்டது கொடுமையிலும் கொடுமை" இப்படி முடிவுகளைச் செய்யாவிடில் வாழமுடியாது. A/L படித்தபின் வேலை செய்வதா? தொடர்ந்து கற்பதா? என முடிவுசெய்யாவிடில் காலம் வீணாகும். — முடிவுவெடுக்கும் வரை வாழ்வில் ஒரு தரிப்பு ஏற்படும். அயலவன் எப்படியானவனென முடிவுசெய்யாவிடில் அவனோடு கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது. நண்பன் நம்பிக்கையானவனென்று முடிவு செய்யாவிடில் அந்தரங்களைப் பகர முடியாது. நடைபெறும் சம்பவங்கள் பற்றி நாம் எடுக்கும் முடிவுகளால் அச்சம்பவங்களில் எவ்வித பாரிய மாற்றத்தை உண்டு பண்ணுவது அரிதாயினும் அவற்றைக்கேள்விப் படும்போது எமது மனதில் ஏதோ ஒரு முடிவு ஏற்படுகிறது. நிகழ்ந்த சம்பவத்தைப் பொறுத்து அதனைப் பற்றி அக்கறை காட்டுகிறோம் அல்லது அலட்சியமாக இருக்கிறோம். அக்கறை இருப்பின் அதனை ஆராய்ந்து முடிவெடுத்து மற்றவர்கட்கும் தெரிவிக்கிறோம். அவசியமேற்படின் அவர்களைச் செயற்படத்தூண்டுகிறோம்.

ஒரு முடிவினை அடுத்த காரியத்தை ஆரம்பிக்கிறோம்—அடுத்த காரியத்திற்கான தூண்டுதல் கிடைக்கிறது. பெண்ணுக்கு வயதாகிவிட்டது என்ற முடிவு அவளுடைய திருமணம் பற்றிப் பெற்றோரைச் செயற்படத்தூண்டுகிறது. அவன் ஒரு முரடன் என்ற முடிவு அவனுடன் எச்சரிக்கையுடன் பழக வேண்டுமென எமக்கு அறிவுறுத்துகிறது. நாம் கொண்டுள்ள அபிப்பிராயங்கள், கருத்துக்கள், மதிப்பீடுகள் யாவும் ஒரு வகையில் தற்காலிக அல்லது நிரந்தர முடிவுகளே. எமது முடிவுகளின் வெவ்வேறு வடிவங்களே இவை. சிலர் அயலவர்கள், சம்பவங்கள் போன்றவற்றைப் பற்றி எவ்வித அக்கறையுமின்றி இருப்பதுபோல் தோன்றினாலும் அவனது உள்ளத்தின் ஆழத்தில் முடிவுகள் உருவாகியிருக்கின்றன. இன்னும் சிலர் தாம் நேரடியாகப் பாதிக்கப்படும்வரை எக்காரியங்களைப் பற்றியும் அக்கறையற்றிருக்கின்றனர்.

மத்தியகிழக்கில் நடைபெறும் போரைப்பற்றிக் கவலையில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனை எரிபொருள் தட்டுப்பாடு விழிப்படைய வைக்கிறது. சீதனக் கொடுமைகளைக் கண்டித்துச் செயற்படாமல் ஒதுங்கியிருப்ப வன் தனது மகளுக்குச் சீதனமா கப் பெருந்தொகை கொடுக்கும் நிலை வரும்போது தூக்கத்திலி ருந்து எழுகிறான். கடவுள் நம்பிக் கையற்றவன் மனைவி, பிள்ளை நோயுற்றபோது அதே கடவுளைத் தினமும் வழிபடுகிறான். இவ்வாறு சம்பவங்கள் நம்மை முடிவு செய் யவோ அல்லது செய்த முடிவை மாற்றவோ நம்மைத் தூண்டுகின் றன. அச்சத்தினாலும் பிறரின் வற் புறுத்தலினாலும் தவறான தகவல் களின் அடிப்படையிலும் எடுக்கப் படும் முடிவுகள் மனப்பூர்வமான வையாகவும் உண்மையானதாகவும் முழுமையானதாகவுமிருக்க முடி யாது.

அவசர — ஆறுதலான முடிவுகள்

சந்தர்ப்பங்களையும் தேவைகளை யும் பொறுத்து சில சமயங்களில் முடிவுகளை அவசரமாக எடுக்க வேண்டியுள்ளது. ஒருவர் திடீ ரென நோய்வாய்ப்பட்டுவிட்டார். எந்த வைத்தியரிடம் எடுத்துச் செல்வது. தொலைபேசியில் உரை யாடும் ஒருவருக்கு உடனடியாகப் பதிலளிக்க வேண்டியநிலை. போர் முனையில் தாக்குதல்கள் நடை பெற்றுக்கொண்டிருக்கும் போது தன் படையினதும் மாற்றான் படையினதும் பலம், நிலை ஆகிய வற்றை உடனுக்குடன் கணித்து உத்தரவிடும் நிலையில் ஒரு தளபதி இருக்கிறான். அவனும் யோசித்தே முடிவெடுக்கிறான் - ஆனால் மிக விரைவாக தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் அச்சமயத்தில் மிகமுக் கியமானது - போரின் முடிவையே மாற்றி விடக்கூடும். இப்படியான சமயங்களில் சாவகாசமாகச் சிந் திக்க அவகாசமிருப்பதில்லை. இன் னும் சில சந்தர்ப்பங்களில் ஆறு தலாகப் பன்முறை சிந்தித்து முடி வெடுக்க அவகாசம் கிடைக்கிறது. பலருடைய ஆலோசனைகளைப் பெற்று அவற்றை ஆராய்ந்து பார்க்க முடிகிறது. தற்காலிக மாக ஒரு முடிவையெடுக்கவும் பின் னர் நிலைமையை ஆராய்ந்து இறுதி முடிவினை எடுக்கக் காலம் கிடைக் கிறது. துரிதமாகச் சரியான முடி வெடுப்பது பற்றி ஒரு துணுக் குண்டு. பேராசிரியர் வைத்திய மாணவரிடம் நோயையும் மருந் தின் பெயரையும் குறிப்பிட்டு என்ன அளவில் அதனைக் கொடுக்க வேண்டுமென வினவினர். மாண வன் 50 மில்லிகிராம் எனக் கூறி விட்டு சில நிமிடங்களில் அது தவ றென உணர்ந்து 30 மில்லிகிராம் போதுமென்றான். பேராசிரியர் அமைதியாக "நோயாளி மருந் தின் அளவு கூடியதால் இறந்து விட்டார்" என்றார்.

முடிவெடுத்தலும் தவறான முடிவுகளின் விளைவுகளும்.

1. தெளிந்த சம நிலையான அறிவு
2. ஏனையோரின் கருத்துகட்குச் செவி கொடுத்தல்
3. சீர்தூக்கியாராயும் திறன்
4. உண்மையை ஏற்றுக்கொள் ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை சரியான முடிவுகளைச் செய்வதில் நமக்குத் துணை நிற்கின்றன. A/L. சித்தியடைந்த ஒருவனுக்கு உயர்கல்வி வாய்ப்பும் வேலையொன்றும் ஒரே சமயத்தில் கிடைக்கின்றன. அவருடைய குடும்பத்தின் பொருளாதாரநிலை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இந் நிலையில் அவர் வேலையை ஏற்பதா உயர்கல்வி கற்பதா என்ற முடிவினைச் செய்யவேண்டும். இம் முடிவினைச் செய்ய உயர்கல்வியின் பயனையும், வீட்டின் தேவையையும் கிடைக்கவுள்ள வேலையின் தன்மையையும் பற்றிய தெளிந்த அறிவு வேண்டும். இவை ஒவ்வொன்றையும் ஒப்பிட்டு சீர்தூக்கி ஆராயும் திறன் வேண்டும். உயர் கல்வியினால் எத்தகைய தொழில் கிடைக்க வாய்ப்புண்டு — அது இப்போ கிடைக்கவுள்ளதை விட மேலானதா கல்வியைத் தொடர்ந்தால் வீட்டின் நிலை எப்படியாகும் என்பன பற்றி ஏனையோரின் ஆலோசனைகளைப் பெறுதல். இவைகளில் காணப்படும் உண்மைகளைத் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ளல். போன்றவை அவசியமாகும்.

நிர்ணயிப்பவை எமது முடிவுகளே!

பிறரைப் பற்றி தவறான முடிவுகளை யெடுத்து அவர்களது வாழ்வு கெட நாம் காரணமாவதுண்டு. குறிப்பாக ஒருவரின் நற்பெயரைக் கெடுக்கக் கூடிய முடிவுகள் அவரது மரணத்திற்கே வழி கோலுவதுமுண்டு. எனவே மற்றவர்களைப் பற்றிய முடிவுகளை யெடுப்பதில் நாம் மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும். எமது சொந்த வாழ்வு பற்றிய எமது முடிவு எம்முடன் நின்று விடலாம். இன்னொருவர்பற்றி நாமெடுக்கும் முடிவினால் அவரது வாழ்வு எச்சமயத்திலும் பாதிக்கப்பட இடமளிக்கலாகாது. ஒருவரைப் பற்றிய அறிக்கையினைத் தயாரிக்கும் பொறுப்பில் உள்ளவர் மிக மிக அவதானமுடன் நடந்துகொள்ள வேண்டும். அவ்வறிக்கை சம்பந்தப்பட்ட அபேட்சகரின் முழுவாழ்க்கையையுமே பாதிக்கக் கூடியதாகச் சிலசமயம் அமைந்துவிடலாமென்பதை அவர் கவனத்திற் கொள்வதவசியம். பிறருடைய வெளியரங்கமான செயல்களை மட்டும் பார்த்து அவரைப் பற்றியதொரு முடிவுக்கு வருதல் மிகவும் ஆபத்தானதாகும் செயல்கள் எண்ணங்களின் பிரதிபலிப்பாகப் பெரும்பாலும் இருப்பினும் அச் செயல்களின் ஊடாக அவரின் நோக்கத்தினை உய்த்துணரும் திறமையும் பொறுமையும் நம்மில் எத்தனை பேருக்குண்டு? பனை மரத்தினடியில் நின்று பாலை அருந்தினாலும் கள் என்று தான் நம்மில் பலரும் நினைக்கிறோம். பானம் பாலா - கள்ளா ஏன் பனைமரத்தின் கீழ் நின்று அதனை அருந்துகிறான் - என்றெண்ணிப் பார்க்க நமக்கு அவகாசமும் சில சமயமும் விருப்பமும் இருப்பதில்லை. முடிவினைச் செய்ய மட்டும் முந்திவிடுகிறோம். நமது குறைபாடுகளுடன் மற்றவர்களை விளங்க முயற்சிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவர்கள் செய்யும் சரியானவை கூடத் தவருகத்தோன்றுவதுண்டு. எமது குறைகளைத் திருத்த விரும்பாது மற்றவர்களை ஆராய முயல்வதன் விபரீத விளைவு இதுவாகும். தன்னை ஒரளவாகுதல் சரியாகப் புரிந்துகொண்டவன் மற்றவர்களையும் சரியாக அறிந்து கொள்கிருன் அல்லது அறிய முயற்சிக்கிருன். மற்றவர்களின் வெளியரங்க செயல்கள் எத்தனையோ நமக்குப் புரியாதவை. அச் செயல்களைப் பற்றிச் சம்பந்தப்பட்டவருடன் உரையாடாமல் அவரின் நோக்கினை நாம் தெளிவாகஉணரமுடியாது. வெளிச் செயலின் பின்னுளள்ள காரணத்தை அறியாமல் செயலை மட்டும் கண்டு முடிவு செய்தல் தவருனதாகும்.

நாகரீகமென்ருல் என்ன வென்று தெரியாவிட்டால் அலங்கோல ஆடைகள் எமக்கு உயர் நாகரீகமெனவும், ஒழுக்கம் பற்றிய சீரான கருத்தைக் கொண்டிராவிடில் ஒழுங்கீனத்தை ஒழுக்கமெனவும் கருதிச் செயற்பட்டு சமுதாயத்தையேகுழப்பிக்கொண்டிருப்போம்.

உணர்ச்சி வசப்பட்டும், தீர விசாரியாமலும், மற்றவர்களின் ஆலோசனைகட்குச் செவி கொடாமலும், பலர் தவருன முடிவுகளையெடுத்து அல்லற்படுகின்றனர். நிதானமிழந்து பேசத்தகாததைப் பேசுவதும், செய்யக்கூடாததைச் செய்வதும், தீர விசாரியாமல், பெரியோரின் அறிவுரையின்றி வாழ்க்கைத் துணையைத் தேடுவதும், இப்படியான அல்லல்களிற் சிலவாகும். ஒருசிலரின் தவருன முடிவினுல் அவர்களைச் சார்ந்தோரும் அவர்களும் திட்டங்களும் அழிவுக்குள்ளானதற்குச் சான்றுகள் பலவுண்டு. உ+ம்; 2-ம் உலக யுத்தத்தின் போது பிரிட்டனைத் தாக்கவேண்டிய சந்தர்ப்பத்தில் கிட்லர் ரஷ்யா மீது படையெடுத்தான். அவனது படைகள் குளிரினுல் பாதிக்கப்பட்டன. கிட்லரின் கனவுகள் நிறைவேருததற்கு இப் படையிழப்பும் ஒரு காரணமாகும். அவசர புத்தியும். தீர விசாரியாமையும், நல்ல ஆலோசனைகளை அலட்சியம் செய்வதும், உண்மையை ஏற்க மறுப்பதும் தவருன முடிவுகளை நாம் எடுக்கக் காரணிகளாக அமைகின்றன.

முடிவுகள் சீராக அமைய தெளிந்த அறிவும் உணர்ச்சிச் சமநிலையும், திறந்த மனமும் அவசியமென முன்னர் கூறப்பட்டுள்ளது. வளைந்த அடி மட்டத்தினுல் அளந்து சரியான அளவைப்பெற முயல்வது அறிவீனம். தம்மைச் சீர்படுத்த விரும்பாதவர்களும், அதற்கான தைரியம் இல்லாதவர்களும், மற்றவர்களைப் பற்றியும், சம்பவங்களைப் பற்றியும் சரியான முடிவுகட்கு வர முடியாது. பிழையான முடிவுகளையெடுத்துத் தம்முடையவும் மற்றவர்களுடையவும் வாழ்வில் துயரைவிதைத்து விடுகின்றனர். எனவே சரியான முடிவுகளையெடுக்கக் கற்று எம்முடையவும் மற்றவர்களுடையவும் வாழ்வில் மகிழ்ச்சி நிலவ வழிவகுப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◐ சிறுகதை ◐

# பார்க்காத பக்கங்கள்

செல்வி எஸ். ஸ்ரீரஞ்சனி
பேராதனைப் பல்கலைக்கழகம்



"துணை தேடி வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற எண்ணமே இருக்க வேண்டும் முடியாவிட்டால் அந் நிலையில் தனி வாழ்க்கை நடத்தவும் துணிவு இருக்க வேண்டும். குடியிருக்க நல்ல வீடு கிடைப்பது அருமை. ஆகையால் மரத்தடியில் உண்டு உறங்கிக் காலம் கழிப்பேன் என்று ஒருவர் முடிவு செய்வது பொருத்தமா? நல்ல குடிசையாவது போட்டுக்கொண்டு வாழ எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். அதற்கும் வழி இல்லையானல் மரத்தடியில் போகத் துணிய வேண்டும். அந்த மனப்பான்மை தான் உங்களுக்குத் திருமணத்தைப் பொறுத்தவரையிலும் இருக்க வேண்டும். வருவது வரட்டும் மனப்பான்மை நல்லதாக இருக்கட்டும். நல்ல கணவர் வாய்ப்பார் என்ற நம்பிக்கையோடு இருங்கள். நம்பிக்கை அற்ற வகையில் எதிர்காலத்தைப் பற்றி எண்ணிக் கெடாதீர்கள்"- என டாக்டர் மு. வரதராசன் 'அல்லி' என்ற தனதொரு நாவலில் கூறுகின்ருர். உண்மையில் வாழ்வுக்கு திருமண பந்தம் உப்புப் போன்றது. திருமணமாகாதவன் பாதிக் கத்தரிக்கோல் போல் தோற்றமளிக்கின்ருன். தாலியற்ற பெண் முகவரியிடப்படாத கடிதத்திற்கு சமனுவாள்....."

'பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி'யில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் கட்டுரை எனது செவிகளிலும் ஒலிக்கின்றது. முன்பாக இருந்திருந்தால் ஓடிச் சென்று வானெலி அருகில் இருந்து அட்சரம் தவருமல் கிரகித்திருப்பேன். சிலவேளை குறிப்புகள் கூட எடுத்ததுண்டு. ஆனல் இப்போதெல்லாம் இவை வீண் பிதற்றல் போன்றிருக்கிறது. எனது சினேகிதி வீட்டிற்குப் போகும் அவசரத்தில் நான் எனது கடமைகளில் ஈடுபட்டிருந்தாலும் கட்டுரை வீசிய கல் என் மனதில் அலைகளை உருவாக்கி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பருவம் தெரிந்து வளரும் நாள்முதல் அம்மாநெடுகச் சொல்லுவா. ''கலியாணம் கட்டக் கூடாது பிள்ளை. இது என்ன வாழ்க்கை...! ஒரு சுதந்தரமும் இல்லாமல் பயந்துகொண்டு... எனக்கு வாழ ஒரு உதவியிருந்தால் இந்த அடிமை வாழ்க்கைக்கு வந்திருப்பேனு! ஒரு உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தால் எவ்வளவு நல்லா வாழ்வை அனுபவிக்கலாம்'' எனக்கு இதைக் கேட்க எரிச்சலாகவும், அரியண்டமாயும் இருக்கும். வாசித்த புத்தகங்களில் வந்த இலட்சியத் தம்பதிகள் என் கண்முன் நிழலாடுவார்கள். அன்பான வாழ்வுக்கு; ஒருவருக்காக ஒருவர் வாழும் அந்நியோன்யத்திற்கு; வாழ்வில் ஒரு அர்த்தம் காண, பிடிப்புருவாகவெல்லோ கலியாணம். ருசித்துச் சாப்பிட கணவர் இல்லை, வேலை முடிந்து வரும் அம்மாவை எதிர்பார்த்துக் காத்திருக்க பிள்ளைகள் இல்லையென்ருல் என்ன வாழ்க்கை என அலுத்துக் கொள்வேன். ''எம்மிடம் சீதனம் இல்லை, உங்களுக்கு கட்டித்தர எம்மால் முடியாது, நீங்களாக உழைத்து வாழ வேண்டியது தான்'' என அப்பா சொல்லும் பல்லவியை இன்னொரு விதத்தில் அம்மா சொல்கின்ருே எனக் கோபமும் வரும். ஒரு வருத்தம், துன்பம் என்று வந்தால், கடைசிக் கால ஆறுதலுக்கு பிள்ளைகள் தானே உதவி என்றெல்லாம் நினைத்துக் கொள்வேன். இவ்விதமாய் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஒரு தீவிரமான ஆசை வளர்ந்தது.

ஆனுல் படிப்படியாக அப்பாவின் அதட்டலும், பிடிவாதமும், தான்தோன்றித்தனமான செய்கைகளும் புரிய ஆரம்பித்தது அவர் மாற்றலாகி ஊருடன் வந்த பின்பு தான். அப்போது எனக்கு 16 வயது. அம்மா காலையில் எழும்பி சமைத்து எம்மையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அப்பாவின் வேலைபார்த்து பின் ஆடு, மாட்டிற்கு தீனி தேடி, மதிய உணவை நாம் வரமுன் மேசைக்கு எடுத்து பின்னேர தோட்ட வேலையுடன் இரவு சமையலை முடித்து ஓய 10 மணிக்கு மேலாகி விடும். ஆனுல் அப்பாவோ இரக்கமின்றி எங்கு பிழை தேடலாம் என்ற மனப்பான்மையுடன் தான் எப்போதும் இருப்பார். உடுப்புத் தோய்க்கவில்லை என்று ஒருக்கா சீறுவார், பிறகு ஆடு அழுகிறது என அம்மாவுக்கு அடிப்பார், தம்பி விளையாடி குப்பை போட்டிருந்தால் அதைக் காட்டி அம்மாவை உலுப்பியே எடுத்து விடுவார். நல்லநாள், பெருநாள் என அம்மாவை எங்காவது அவர் அழைத்துச் சென்றதோ இல்லை, ஒரு சேலை எடுத்துக் கொடுத்ததோ நான் வாழ்வில் இதுவரை அறியாத விடயங்கள். அவர் வருகிருர் என்ருல் எங்கிருந்தாலும் ஓடிப் போய் புத்தகமே தஞ்சமென இருந்து விடுவேன். அப்பாவைப் பற்றி எனக்கு துளிகூட நல்லபிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராயம் கிடையாது. தந்தையைப் பற்றிய அபிப்பிராயம் பிள்ளைக்கு தோன்றுவதற்கு வித்திடுபவள் தாய் தானும் என்று எங்கோ வாசித்த நினைவு. அப்பாவைப் பற்றி நல்லாச் சொல்வதற்கு அம்மாவுக்குத்தான் என்ன இருக்கிறது ?

சின்ன வயதிலேயே பிள்ளைகளை திருமணம்செய்து கொடுக்க துடிக்கும் பெற்றோரைப் பார்த்து நம் பெற்றோர் இப்படி இல்லையே என ஏங்கிய காலம்போய் சலன மற்று பின் இவர்களின் வாழ்வும் எப்படுகுழிக்கு தள்ளப்படுகின்றதோ என்ற அனுதாபமே மிஞ்சியது.

எந்தக் கோணத்தில் நாம் பார்க்கின்றோமோ, எந்நிறக்கண்ணூடியூடு நோக்குகின்றோமோ அதே மயமாகத்தான் யாவும் காட்சியளிக்கும் என்பதற்கமையவோ என்னவோ நான் சிந்தித்த அத்தனை நிகழ்வும் இதே வகையாகவே இருந்தன. திருமணமாகி கணவருடன் சென்ற சித்தியொருவர் வந்திருந்தபோது — ஒருநாள் என்னிடம் — ''பிள்ளை இது வேண்டவே வேண்டாம்'' என தாலியைத் தூக்கிக் காட்டினர். அப்படிச் சொல்லக் கூடிய ளவுக்கு வேதனையும், விரக்தியும் நிறைந்த சம்பவம் என்ன நடந்ததோ என எனக்குத் தெரியாவிடினும் அவர் அப்படிச் சொல்வதற்கு ஏதோ ஒரு உண்மை இருக்கத் தானே வேண்டும் என சிந்திக்க வைத்தது.

பக்கத்து வீட்டு மாமி பிள்ளைகளை வளர்க்க முடியாமல், ஒரு நேர உணவு கொடுக்க வழிதேடி எல்லாவற்றையும் விற்றுவிற்று முடிவில் வட்டிக்கு பணம் வாங்க மாமாவோ மாதாமாதம் வந்து குடித்து வெறித்துவிட்டு 6வது பிள்ளை பெறவும் வழிவகுத்து விட்டார். எனக்கு இவற்றைப் பார்க்கப் பார்க்க குமட்டுவது போல இருக்கும். வேதனையும் விரக்தியும் சேர 'என்ன மனிதர்களப்பா' என்ற வெறுப்பே தோன்றும்.

சுவர் கடிகாரம் நான்கு முறை அடித்து ஓய்ந்தபோது நானும் ''போட்டு வருகிறேன்'' என கதவை பூட்டிக் கொண்டேன்.

பல்கலைக்கழகம் சென்ற போதும் இதே அனுபவங்கள் தான்! அறிவின் சிகரம், சிந்தனையின் உச்சியில் உள்ளவர்கள் அல்லவா? அதன் வெளிப்பாடு நாடகம், பேச்சுப்போட்டியென்றால் கூட பெண் பங்குபற்றக்கூடாது என்று ஒரு தார்ப்பரியம். பங்குபற்றுபவர்கள் அவர்களின் கணிப்பில் இறங்கி விடுவார்களாம். பெண் என்றால் ஆணுக்கு அடங்கிப் போக வேண்டுமாம்! சீனியர் போய்ஸ் யூனியர்ஸ்க்கு அட்வைஸ் பண்ணுவினம் — ''உங்கடை பெட்டையள் என்ன குதிக்குதுகள். கொஞ்சம் அடக்கி வையுங்கோ.'' கணவனுக்குத் தான் கட்டுப்படவேண்டும் என்றால் உள்ள பெடியங்களுக்கும் என்ன செய்தாலும் பரவாயில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பணிந்து போக வேண்டுமா? என்ற மனக்குமுறல் அந்த ஆட்சியில் ஏற்பட்டது.

பெற்றோருக்கு மதிப்பு, அவர்கள் அலைந்து தேடிய மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்வதா என்ற பயம், தனக்காக காத்திருக்கும் தங்கையருக்கு வழிவிட வேண்டுமேயென்ற பரிதவிப்பு, மேலாக பின்பு எப்போ, எப்படி, எங்கே கலியாணம் சரிவருமோ என்ற ஆதங்கம். மொத்தத்தில் பெண்ணின் அடிமைத்தனம் தான் பேசும் மாப்பிள்ளையை மறுக்காமல் பெண் திருமணம் செய்வதற்கு காரணம் என எனது அபிப்பிராயத்தை பேனு நண்பருக்கு எழுதியதும் ஞாபகம் வந்தது.

768 பஸ் வந்ததால் சிந்தனை கலைந்த நான் பஸ்சில் ஏறு அமர்ந்து கொள்கின்றேன். கண்ணுடியூடாக இயற்கை அழகை ரசித்தபடி மனதினை அதை லயிக்க விட்ட என்னை 'சேர் இப்போ எங்கே படிப்பிக்கின்றீர்கள்' என்ற குரல் திசை திருப்ப திரும்பிப் பார்த்தேன். வேதநாயகம் மாஸ்ரரைத்தான் யாரோ கேட்டார்கள். அவர் எனக்கு உயர்தர வகுப்பில் இரசாயனம் படிப்பித்தவர். அதற்குள் என்னைப் பார்த்த அவர் 'விஜீ நீ இப்போ எங்கோ படிப்பிக்கின்றுய்? இம்முறை பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் கூட உன்னை எம்முடைய பாடசாலைக்கு மாற்றி எடுக்க வேண்டும் என பேசிக் கொண்டனர்' என்றூர். அவருக்கு பாடசாலை அபிவிருத்தியில் அக்கறை மட்டுமல்ல; என்னிலும் நிறைந்த அன்பும் அபிமானமும் உண்டு என்பது எனக்குத் தெரியும்.

அவர் வந்ததும் வந்தார் எமது வாழ்வும் விடிந்ததோ !என வியக்கும் அளவிற்கு பின்னேர வகுப்பு, சனி ஞாயிறு விஞத்தாள்கள் செய்து பழகும் வகுப்பு, பின் விடுமுறைகளில் அடிக்கொரு தடவை சோதனை என வைத்து எம்மை இரசாயனத்தைக் கரைத்துக் குடித்தவர்களாக்கி விட்டார். இதஞல் அவரில் எமக்கு தனி மதிப்பும், அபிமானமும் ஏற்பட்டன. ஆஞல் பின்புதான் உண்மை தெரிய வந்தது. அவர் வீட்டிற்கு போக விரும்பாமல் செலவிட்ட விரும்பிய மணித்தியாலங்கள் தான் எமக்குப் பயனுள்ள நேரங்களாயின என்று. தாய் சொல்லைத் தட்டக் கூடாது, தங்கையை வாழ வைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக அவர் பெண்ணையல்ல, சீதனத்தைக் கட்டிக் கொண்டாராம். பெண் தனக்கு அழகில், அந்தஸ்தில், பழக்க வழக்கங்களில் பொருத்தமில்லை என்று அவ்வை வெளியே கூட்டிக்கொண்டு கூடச் செல்வதில்லையாம்! இதுதான் நல்ல நோக்கமா? ஒரு பெண்ணின் மனதை வதைப்பது, அவளின் ஆசைகளை, எதிர்பார்ப்புகளை, கனவுகளை, கற்பனைகளை பலியெடுத்தது தான் நல்ல நோக்கமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி பரிசளிப்பு விழாவிற்கு அந்தப் பெண்ணும் வந்திருந்தார். முதலில் நடந்த தேனீர் விருந்தில் சகல ஆசிரியர்களும் தம்பதி சமேதரராய் கலந்துகொண்டு மகிழ்வுடன் சிறப்பிக்க இவர் மட்டும் தனியே வந்திருந்தார். பின்பும் மனைவி தனியாகச் செல்ல இவர் அங்கு கதிரை, மேசை தூக்குவதில் மும்மரமாக ஈடுபட்டிருந்தார். நல்ல பொதுச் சேவைதான் என்று அருவருப்புத் தான் வந்தது.

இப்படியான நிஜங்களின் தரிசனங்கள், சீதனக் கொடுமையுடன் இப்படியே வாழ்ந்து விடுவோம் என்ற எண்ணத்தை என்னுள்ளத்தில் வலுப்படுத்தியது.

என் தோழி ரேணு என்னைக் கண்டதும் ஓடிவந்து வரவேற்றாள். பரிசளிப்பு விழாவில் சந்தித்த பின் 6 மாதங்களின் பின் தொழில் கிடைத்தபின் தானே அவளிடம் சென்றேன். மூன்று நாளாவது நின்று தான் போக வேண்டுமென்ற நிபந்தனையுடன் என்ன செய்வது, எங்குபோவது என திட்டம்தீட்ட ஆரம்பித்து விட்டாள். முதற் கட்டமாக அன்று இரவு அருகிலுள்ள நல்லூர் முருகனிடம் செல்வது என்ற முடிவுடன் 'நீ இருந்து கொள் - 10 நிமிடத்தில் வந்து விடுகின்றேன்' என சில பத்திரிகைகளைத் தந்துவிட்டு விடை பெற்றாள் — சமையலுக்கு உதவுவதற்காக.

பத்திரிகையில் ' கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என ஒருபெண் முதல் வாரத்தில் எழுதிய கட்டுரைக்கு 'இன்னொரு பெண் விவாதிப்பதுபோல தனது கருத்தை எழுதியிருந்தார். ''கல்லானாலும், புல்லானாலும் புருஷன்தான் என வாதிடும் சகோதரி காப்பிய, காவிய உலகில் தான் வாழ்கின்றாள் போலும் — தயவுசெய்து சகோதரியே மாயை களைந்து நிஜ உலகுக்கு வாருங்கள் — நீங்கள் ரொம்பத் தூரம் கூட போகவேண்டாம்! அண்டை அயல் வீட்டை பாருங்கள் போதும், அன்றாடம் குடிபோதையில் வந்து துன்புறுத்தும் கணவனை, அடித்து உருட்டிப் பந்தாடும் புருஷனையெல்லாம் தெய்வம் என்று போற்றி வாழ வேண்டுமா? அவன் செய்வதற்கெல்லாம் மங்களம் கூறி தமது சுய இன்பத்துக்காகப் பெற்ற பிள்ளைகளை றோட்டில் அலைய விடுவதா? சுய உணர்வில்லாத கணவனை எதிர்க்கக் கூடாது, அவன் சொல்தான் வேதவாக்கு என இருக்க முடியுமா?......... '' என்றெல்லாம் நன்கு கூறியிருந்தார். எனக்கு இது ஏதோ ஒரு ஆத்ம திருப்தியைத் தந்தது. ஆனால் ரேணு என் உற்ற தோழியாக இருந்தாலும், இதில் உடன்பட மாட்டாள் என்பதால் அவளுடன் இதைப் பற்றி பேசுவதில்லை.

அன்று நல்லூரில் வள்ளி திருமணம், தேவயானை கதவைப் பூட்டி கோபத்தில் இருக்க முருகன் முதலில் கெஞ்சி பின் சமாதானம் கூறி இறுதியில் வலோற்காரமாக கதவை திறப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கதை. அதிலும் பிழை செய்தாலும் வீம்பு காட்டும் ஆணின் தரிசனம்தான். பின் சிறப்புச் சொற்பொழிவாக 'இல்லறம் காக்கும் இல்லாள்' பேசப்பட்டது.

''இயற்கையிலேயே ஆணைவிட பெண் உடற் பலத்தில் மட்டுமல்ல, மூளையின் பரிமாணத்திலும் குறைந்தவள் தான். ஆனால் மனோபாவம், பொறுமை, சகிப்புத் தன்மை, உண்மை, அன்பு செய்யும் ஆற்றல் யாவற்றிலும் ஆணைவிட பெண்ணே உயர்ந்திருக்கிறாள். இதனால் தான் இயற்கை பெண்ணிடம் சுமைகளையும், பொறுப்புக்களையும் நம்பி ஒப்படைத்துள்ளது. உலகினை உருவாக்கும் பெரும் பொறுப்பு அவளுடையதே! பிறந்த குழந்தையின் முதற்சூழல் அன்னையன்றி வேறு எது? எனவே உரிமை, உரிமையென்று போராடி வீட்டிற்கு வெளியே வரத் துடித்து வீட்டை ஆதரவற்ற, அனாதரவான இடமாக்கி விடாதீர்கள்!

நாடு என்பது பல வீடுகள் இணைந்த இணைப்புத்தானே! ஒவ்வொரு ஆணுடைய வெற்றியின் பின்னணியிலும் ஒரு பெண்ணே இருக்கின்றாள் வீடு சிறக்க நாடு உயரும். நல்லதொரு அன்னையாக, மனைவியாக இருந்து ஆண்களுக்கு நீங்கள் ஒளியூட்டுவதினாலேயே சக்தியின்றிச் சிவமில்லை என்பர். நாட்டினை, மொழியினை மேலாக கடவுளை தாயின் வடிவினிலேயே நாம் பார்க்கிறோம். எப்படிப் பட்ட புருஷனானாலும் உங்கள் அன்பு மூலம் நீங்கள் விரும்பும் வடிவில் அவனை மாற்றலாம் .....

குழந்தையிடம் ஏதாவது வேலை வாங்குவதற்காக நீ கெட்டிக்காரப்பிள்ளையல்லோ, நல்ல பிள்ளை ஓடிப்போட்டு ஓடிவாராசா என்பது போல இதுவும் ஒரு ஏமாற்று வித்தை தான் என் மனதில் விரக்திச் சிரிப்புத் தோன்றியது. ரேணுவோ நல்லதொரு பேச்சாம் என புகழாரம் சூட்டியபடி வந்தாள்.

தெல்லிப்பழைச் சூழலை விட்டு யாழ்ப்பாணத்திலிருந்து விலகி மட்டக்களப்பிற்கு நான் வந்து மூன்று மாதங்களும் சென்று விட்டன. ஒருநாள் எனக்கு ஓய்வாதலால் ஆசிரியர்கள் இளைப்பாறும் அறைக்குச் சென்றபோது பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஆசிரியர் சற்று உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தார். அண்மையில் நிகழ்ந்த வன் செயல்களின் பின் மீண்டும் மனைவி வேலைக்குச் செல்லச் சொன்ன போது, பே க மறுத்தாரம் கணவர். அவர் பல சிரமங்களின் மத்தியில் இருந்த உடமைகளை இழந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உடுத்த உடுப்புடன் தான் ஓடி வந்திருந்தாராம். ஆனால் மனைவியோ பிள்ளைகளுக்கு என்னத்தைச் சாப்பிடக் கொடுப்பது, காசுக்கு எங்கு போவது எனத் தினம் சண்டை பிடித்தால் தொல்லை தாங்க முடியாமல் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டாராம். இப்படியும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்பிளை இருப்பாளா? இனி என்ன செய்யப் போகின்றுவாம்! அந்தக்காலம் மலையேறி விட்டது! இப்ப வீடுகளில் பொம்பிளை ராச்சியம்தானே! பணம்தான் உயிரிலும் பெரிது என்ருகி விட்டது ......இப்படிப் பலரக விமர்சனங்களின் பின் இன்னுெர் ஆசிரியர் கூறினுர்... "எங்கள் வீட்டிற்கருகில் குருவிகலைக்கின்ற பெண்கள் இருக்கின்ருர்கள். அவர்களுடைய கணவர்மார் கூலித்தொழிலுக்குச் செல்வதால் தினமும் கூலி கிடையாதுதானே! ஒருநாளைக்கு அவன் தொழிலுக்குப் போகாவிடில் வீட்டிற்கு வராதே எனத் துரத்துவார்கள். நேற்றுக்கூட ஒருவன் "முதல் நாள் 30/-கொடுத்தேனே-எந்த நாளுமா வேலை கிடைக்கும்? இன்று இல்லாதற்கு இப்படித் துரத்துகிருளே! பசி வயிற்றைக் குடைகிறது - கடவுளே கண்ணைத் திறந்து பார்க்க மாட்டாயா!" என அழுவதை - ஒரு ஆண் கண்ணீர் விடுவதைப் பார்க்க பெரிய பரிதாபமாக இருந்தது" - என்று "இப்படியும் உலகில் நடக்கிறது, மாறியும் இருக்கிறது - அதேவேளை பெண்களைப் போற்றிப் பெருமைப் படுத்துபவர்களும் இருக்கவேயிருக்கிருர்கள் - இந்நிலையில் பெண் அடிமைத்தனம் எனக் கூச்சலிடுவது கூட அர்த்தமற்றது" என ஒரு பெண் ஆசிரியை சொன்ன போது நான் பார்க்காத, பார்க்க மறுத்த பக்கங்களும் உண்மையில் இருக்கத்தான் செய்கின்றன என்ற உண்மை எனக்கு உறைத்தாலும் நம்பி ஜீரணிக்க சற்றுக் கஷ்டமாகத்தானிருந்தது.

சில வாரங்களின் பின் ஊரிலிருந்து வந்த மாமி சொன்ன செய்தி என் மனமாற்றத்திற்கு ஒரு திருப்பு முனையாகவே அமைந்தது. கணவன் ஒழுங்காக உழைப்பதில்லை என்று தானும் அடித்து இருட்டிற்குள் வைத்து சகோதரிகளைக் கொண்டும் அடிப்பித்ததன் விளைவாக அந்த வாலிபன் அவமானம் தாங்காது நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டாளும். என்ருல் நம்பவே முடியவில்லை. உலகில் மனிதர் பலவிதம் ஒவ்வொருவரதும் பாவபுண்ணியங்களுக்கேற்பவோ இல்லை புத்திக்கும், இயல்புக்கும் ஏற்ப நல் வாழ்வு அமைகிறது அல்லது அமைக்கப்படுகின்றது. ஒருவருடைய வாழ்வைப்பார்த்து, அதனை அடிப்படையாகக் கொண்டு எம்முடைய வாழ்வை கற்பனை செய்வது வடிகட்டிய முட்டாள்குணம் தான் என்ற நிதர்சன உண்மை என் அசட்டுத் தீர்மானத்தை பொடிபொடியாக்கியது. கணவனை உள்ளத்தாலும், உடலாலும் ஏமாற்றும் பெண்களும், வேவுமிட்டு நடிக்கும் வேவுதாரிகளும்கூட இருக்கத்தானே செய்கிருர்கள். பெற்ற குழந்தையை ஈவு இரக்கமின்றி நீர்க்கான்களில் எறியும் சில அன்னையர்களும் இருக்கின்ருர்கள் என்பதற்காக தியாகத்தின் வடிவமாகத்திகழும் அன்னையரை, குழந்தைக்காகதான் பத்தியம் காத்து, தன் உதிரத்தைப் பாலாக்கி, இராப்பகல் விழித்து கண்காணிக்கும் தாய்மாரை மறக்க முடியுமா? ஒதுக்கவோ இல்லை நம்பாமலிருக்கவோ முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுமா? புரியாதவர்கள், உணர்ச்சி யற்றவர்கள், அறிவில்லாதோர், கெட்டவர்கள் இருப்பதற்காக என்கணவராக வரப்போகிறவரையும் நான் சந்தேகிக்க வேண்டுமா?

தொடர்ந்த என் அவதானங்களில் உலை வைத்த நேரம் முதல் சொதி இறக்கும் நேரம் வரை மனைவியை வளைய வந்து நின்று உதவி புரியும் என் அறைத்தோழியின் கணவரும், என்னைக் கேட்டால் என்ன, அவரைக்கேட்டால் என்ன என்று சொல்லுகின்ற மாதிரி எவ்விடயத்திலும், எந் நேரத்திலும் ஒந்தப் போகும் சக ஆசிரியர்களான திரு திருமதி ஆனந்தனும் தான் கண்ணில் தெரிந்தனர்.

வாழ்க்கை ஒரு போராட்டம் என ஏற்றுக் கொண்டு அச் சவாலைச் சந்தித்து, அதில் வரும் லாபத்தைப் பகிர்ந்து கொண்டு வாழச் சித்தமாகிவிட்டது என் மனம். மேலாக வாழ்க்கையில் வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வாழ்க்கையை ஒரு கடமையாக ஏற்று நிறைவேற்ற வேண்டிய கட்டுப்பாடும் நமக்கெல்லாம் உண்டு அல்லவா? மாற்றக்கூடியவற்றை மாற்றும் வல்லமையையும் முடியாதனவை பற்றி கவலை கொள்ளா தன்மையையும் எனக்குத் தா'' என்பதே இனி என் பிரார்த்தனை.

[யாவும் எனது கற்பனையே]

---

# ஐந்தெழுத்து

உலகத்தைப் படைத்த ஆண்டவன் ஐந்தெழுத்து
உயிர்களை வாழ உதவும் பகலவன் ஐந்தெழுத்து
நாம் வாழும் மண்ணகம் ஐந்தெழுத்து
மண்ணகத்தில் ஆண்டவனை அடைய செய்யும் தரிசனம் ஐந்தெழுத்து
நாம் வாழ வழி வகுத்த தகப்பன் ஐந்தெழுத்து
பள்ளி சென்று நாம் பெறும் பட்டதாரி ஐந்தெழுத்து
சமூகத்தில் நாம் பெறும் அந்தஸ்து ஐந்தெழுத்து
பருவமதை அடைந்தவுடன் செய்யும் திருமணம் ஐந்தெழுத்து
திருமணத்தின் பின் அமையும் இல்லறம் ஐந்தெழுத்து
இல்லறத்தில் பெறும் பிள்ளைகள் ஐந்தெழுத்து
பிள்ளைகளால் அடையும் மகிழ்ச்சி ஐந்தெழுத்து
மகிழ்ச்சி தரும் நல்வாழ்வு ஐந்தெழுத்து
நல்வாழ்வால் சமூகம் அடையும் வளர்ச்சி ஐந்தெழுத்து
வளர்ச்சியால் அடையும் உயர்ச்சி ஐந்தெழுத்து

— நாகமணி மகேந்திரலிங்கம் —
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள
# வாழ்வு

எப்படியும் வாழலாம்
என்று வாழ்வோர் பலர்.
வாழ்க்கைப் பாதையிலே நடப்போர்க்கு வழிகாட்ட
இவர்கள் எந்த வழிகாட்டியையும் நிறுத்தி வைப்பதில்லை.
இப்படித்தான் வாழவேண்டும்
என்று வாழ்பவர் சிலர்.
வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் இவர்கள் வாழ்வு
வாடா மலர்கள்.
வாழ்க்கைப் பாதையிலே இவர்கள் வாழ்வு
நிழல் தரும் மரங்கள்.
வாழ்க்கைப் படகுக்கு இவர்தம் வாழ்வு
கலங்கரை விளக்கங்கள்
இலட்சியம் இருந்தால் குறிக்கோள் மலர்ந்தால்
வாழ்க்கைப் பாதை தெளிவு பெறும்.
மனித வாழ்வுக்கு அர்த்தம் பிறக்கும்.
இலட்சியம் அற்றவர்கள் திசைதெரியாப் பறவைகள்.
அண்டத்திலும் அகிலத்திலும் அனைத்தும் இயங்குவது
ஒரு இலட்சியத்துடன்
எம் வாழ்விலே இலட்சியம் இல்லையெனில்
நாம் வெட்கப்பட வேண்டியவர்கள்.
என் உடன் பிறப்பே!
நீ செல்வது இலட்சியப் பாதை தானா?
அமைதியாக அமர்ந்து சிந்தனை செய்.
வாழ்விலே உன்னத நிலையடைந்த
உத்தமர்கள் யார்?
இலட்சியம் என்ற சிகரத்தைத் தேர்ந்தெடுத்து
அதற்கென்று தமக்கொரு பாதை வகுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாதையிலே கால் கடுக்க நடந்து
தங்கள் விடாமுயற்சியினுல் ஈற்றில்
அதனை அடைந்தவர்கள் தாம்.
உனது இலட்சியம் என்ன?
அடுத்தவரைக் கேட்காதே. நீயே முடிவு செய்.
அது உனது இயல்புகள், ஆற்றல்களைப் பொறுத்தது.
அது நீ அடையக் கூடியதொன்று தான்
என்பதை உறுதி செய்துகொள்.
அப்படியாயின் இப்போதே சங்கற்பம் செய்.
அதனை அடைவதற்குச் சரியான பாதையைத்
தேர்ந்துகொள்.

நீ தேர்ந்து கொள்ளும் பாதை
நீதியான, நேர்மையான, நம்பிக்கை நிறைந்த
பாதையாக விளங்கட்டும்.
நீ செல்லும் இலட்சியப் பாதையிலே
தோல்விகள் உன்னைச் சந்திக்கும்.
துன்பங்கள் அரவணைக்கும்.
இவற்றைக் கண்டு கலங்காதே.
ஏனெனில், அவை
உனது வெற்றிக்கு உனை இட்டுச் செல்லும் படிக்கற்கள்.
இது முற்றிலும் உண்மை.
தைரியம் இழக்காது இளைப்பை நோக்காது
தொடர்ந்து ஏறிச் செல்.
ஒருநாள் நீ உன் இலட்சியச் சிகரத்தை
அடைவது நிச்சயம்.
அப்போது
உன்வாழ்வின் நோக்கம் நிறைவுறும்.
உன் வாழ்விற்கு பொருள் பிறக்கும்.
உன் வாழ்வு பிறர்க்கும் பயன் கொடுக்கும்.
அப்போது நீ இருந்தாலென்ன
இறந்தாலென்ன
உன் வாழ்வும்
வாழ்க்கை என்ற வானத்திலே
விண்மீனுக ஒளிவீசும்.

ச. எட்மன்ட் றெஜினோல்ட்
பண்டாரவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பதில்கள்

கே. வறுமையிலே வாழ்ந்து கொண்டு, காதலிலே தோல்வியுற்று கண்ணீர் வடித்த வண்ணமாய் இருந்த வேளையிலே ஒளியேற்ற ஒருவர் வந்தார். நானும் மனதினால் அவரை விரும்பினேன். ஆனால் அவர் திருமணமானவர் என்று தெரிந்ததும் விலகினேன். அவர் என்னை விடுவதாக இல்லை. அவர் வீட்டிலும் பிரச்சினை. என் வீட்டிலும் பிரச்சினை. இப்போ நாங்கள் ஒருவரை ஒருவர் விரும்புகிறோம். பிரிக்க முடியாத அளவுக்கு அன்பு வைத்துவிட்டோம். அவரை முடிக்காவிடில் எனக்கு திருமணமே கிடையாது. வாழத் துடிக்கும் எனக்கு வாழவழி கூறுவீர்களா?

R. K. M.

பாசையூர்.

ப: *தங்கையே! உங்கள் வாழ்வே மாயமாகவிருக்கின்றதே. வறுமையை வெறுப்பதா — உங்கள் நிலையை எண்ணி விறைப்பதா — அல்லது வாழ்வு கொடுப்பாரென்று முன்வந்து இப்போ நடிக்கும் இந்தப் பகடைக்காயைப் பற்றிச் சாடவா — அல்லது உங்கள் குருவிச்சை* (Dependent) *மனப்பாங்கைக் கண்டு சிரிப்பதா இக் கேள்விக் குறிகள் என்னை விடை கேட்கின்றன. மூன்று கோணங்களில் உங்கள் பிரச்சினை விரிகின்றது.*

*ஆரம்ப நிலையில் வறுமையின் அடிமட்டத் தாக்கத்தினால் ஓரளவுக்கு விரக்தியின் எல்லையில் இருந்துள்ளீர்கள். இதன் பிரதிபலிப்பும் காதலில் நீங்கள் கண்ட தோல்வியும் யாராவது ஒருவனைக் காதலிக்கும் மனப்பாங்கை உங்களுக்குத் தந்துள்ளது. ஆகையால் உங்களைச் சந்தித்த இந் நபரை எப்படிப்பட்டவர் என்பதை அறியாமல் — அவரைப் பற்றி ஆழமான அறிவைக் கொள்ளாமலும் தவறான தீர்மானமெடுத்து வாழ்வில் ஒளியேற்ற வந்தவரென்ற எண்ணத்துடன் பழகத் தொடங்கி விட்டீர்கள். இது தவறாகும். ''காதல் கண்டவுடனல்ல'' என்று சொல்வார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கொண்டிருப்பது ஆசை விருப்பம்.

இரண்டாவதாக உயர்ந்தவர் - ஒளிகொடுக்க வந்தவரென்று நீங்கள் கருதும் இந்த ஆண்மகன் ஒரு ஏமாற்றுக்காரன் - தனது பல வீனங்களுக்குப் பரிசு கொடுப்பதற்காக வாழத்துடிக்கும் உங்களைப் போன்ற பல பெண்களுக்கு இப்படித்தான் ஆசைமொழி பேசி வாக்குக் கொடுத்திருப்பார் எனத் தோன்றுகின்றது. நீங்கள் தவறி விட்டீர்களென்று சொல்வதற்கு மேலாக ஏமாற்றப்பட்டு விட்டீர்கள் என்று கருதுவது சரியாகும். ஏற்கனவே திருமணமானவர் - இன்னொருத்திக்குச் சொந்தமானவர் தான் எப்படிப்பட்டவர் - எந்நிலையில் இருக்கின்றார் என்பதை மறைத்து பொய் பேசி உங்களுடன் பழகியிருக்கின்றார். இது அவர் உங்கள் மேற்கொண்ட பரிதாப நிலையாகவோ அல்லது காதலாகவோ இருக்க முடியாது. மாறாகக் காமமும் மோகமும் தான். ஒருத்திக்கு அன்பைக் கொடுக்க முடியாமல்-அவளுக்குப் பிரமாணிக்கமாயிருக்க முடியாமல்-அவளோடு ஒன்றாக வாழமுடியாமல்மிகவும் கீழ்மட்டத்தில் நிற்கின்ற இவரா உங்களுக்கு வாழ்வு கொடுப்பார்? இவரைத்தானா நீங்கள் காதலித்தீர்கள்? இப்படியானவர்களை பச்சோந்திகள் என்று அழைக்கலாமல்லவா?

மூன்றாவதாக நீங்கள் கொண்டிருக்கின்ற ''இவரை முடிக்காவிட்டால் திருமணமே கிடையாது'' என்ற மனப்பான்மை தவறானது. இத் திருமணத்துடன் உங்கள் வாழ்வு மலர்ந்துவிடுமென்று நீங்கள்கருதுவதும் பிழையாகும். பிரச்சினைக்குரியவர் உங்களைக் கரம் பிடித்தால் உங்கள் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? - இல்லை. நீங்களும் பிரச்சினைகளுள் அகப்பட்டு அவரை இன்னும் பிரச்சினைகளுக்குள் மாட்டிவைக்க வழி வகுக்கலாம். ஏற்கனவே குடும்ப வாழ்வில் - தாம்பத்திய உறவில் பிரமாணிக்கமற்ற இவர் எப்படி உங்களுக்குத் துணையாக வர முடியும்? அவரது மனைவி - பிள்ளைகளின் எதிர்காலம் எப்படியிருக்கும்? இது நமது சமுதாயப் பழக்க வழக்கங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் முரணானது என்பதை மறந்து விட்டீர்களே. நீங்கள் திருமணம் செய்வதற்காக இன்னொருத்தியின் வாழ்வைப் பாதிக்க விடக்கூடாது. இப்படியான திருமணத்தைச் செய்து காலம் முழுவதும் கண்ணீர் வடிப்பதற்கு மாறாக வறுமையிலும் நிம்மதியாகவிருப்பது நலமாகத் தோன்றவில்லையா? நீங்கள் என்ன செய்யவேண்டுமென்பது எனது தீர்மானமல்ல. நீங்களே உங்கள் வாழ்க்கைக்குப் பொறுப்பு. இதைப் படித்தபின் நீங்களே உங்களுக்கு ஒரு முடிவை- தீர்மானத்தை எடுங்கள். தீர்மானம் சரியாக அமைவதற்கு எனது வாழ்த்துக்களும் ஆசிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: நான் ஒரு கல்லூரி மாணவன் இந்தச் சிறிய வயதிலே பெற முடியாத அனுபவத்தைப் பெற்றிருக்கின்றேன். சமூகத்தவர்களும் நண்பர்களும் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை விரும்பாத ஓர் சிலர் என்னைப் பற்றித் தப்பான முறையில் கதை கட்டுகின்றனர் அவர்களைப் பழிவாங்கும் வெறியுடன் திரிகின்றேன். அதே வேளை பின்னர் எது நிகழும் என்பதை நினைத்துத் தயங்குகின்றேன்.

K. G. S. M
வடதிடலூர்

ப: தம்பி! எவருமே பெறமுடியாத அனுபவத்தைப் பெற்ற நீர் மற்றவர்களின் தவறான கணிப்புக்களைக் கேட்கும் போது அனுபவ மற்றவர்களைப் போல முடிவு எடுக்கின்றீரே. உமக்கு மாத்திரமல்ல வாழ்க்கையில் உயர்ந்து வரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எதிர்க் கட்சியுண்டு என்பதை மறந்துவிடாதீர்கள். உயரத்துடிக்கும் ஒருவரைப் பார்க்கும் போது — வெற்றிப் படிகளில் ஏறி அவன் முன்னேறும் போதும் பொறுமை கொள்பவர்கள் — சோம்பேறிகள் அல்லது தமது இயலாத் தன்மையை — தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாத மனப்பான்மை கொண்டவர்கள் புரிகின்ற சாகசங்கள் தான் இவை.

அவர்களது குறுகிய மனப்பான்மையைக் காணும்போது நீங்கள் சினங்கொண்டு பழிவாங்கும் வெறியுடன் திரிந்தால் அவர்களுக்கும் உங்களுக்கும் வேறுபாடேயில்லாமற் போய்விடும். அவர்களது தப்பான வதந்திகள் உங்களை மேலும் மேலும் ஆக்கபூர்வமான சிந்தனைக்கும், செயலுக்கும் வழிவகுத்துச் செல்ல வேண்டும். நீங்கள் அவர்களைப் பற்றி சிறிதேனும் — கவலைப்படவோ — எரிச்சல்படவோ — கோபப்படவோ வேண்டிய அவசியமில்லை. அவர்களின் கீழ்த்தரமான எண்ணங்கள் மேலும் வெறுமைக்கும் தோல்விக்கும் அவர்களை அழைத்துச் செல்வதுமல்லாமல் உமது வெற்றிக்கும் வழிவகுக்கும்.

ஆகையால் எதிர்ப்புக்களைக் கண்டு துவண்டுவிடாமல் வெற்றியுணர்வுடன் முன்னேறும். குற்றச்சாட்டுக்கள் மத்தியில்தான் ஒருவன் நல்ல தலைவனாக - அறிவாளியாக மாற முடியும் - வளர முடியும். பழிவாங்கும் தன்மை வளர்ந்தால் உமது வளர்ச்சி குன்றிவிடும். சமூகத்தவர்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் மேலும் இழக்க வேண்டியும் வரலாம். எனவே விவேகத்துடன் செயற்படக் கற்றுக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. நான்கு வருடமாக காதலித்த இளைஞனை பெற்றோரின் துன்புறுத்தலால் பிரிந்தும் மறந்தும் வாழ்கின்றேன். செயலில் தான் மறந்தேன். ஆனால் இது வரையிலும் உள்ளத்தால் மறக்கவில்லை. அதே இக்கட்டான நிலையில் வேறு திருமணம் வேண்டாம் என்றால் பெற்றோர் கேட்பதாய் இல்லை. காதலித்தவனை விட்டு விட்டு வேறு ஒருத்தனை மணந்தால், காதல் ஒரு வேடிக்கையாகவும், கேளிக்கையாகவும், ஆகிவிடும். இது மனச்சாட்சிக்கே நியாயமாகுமா? இதற்கு உங்களிடமிருந்து தகுந்த பதிலை எதிர்பார்க்கிறேன்.

— கவலையுடன் வாடும் காதலி

ப: தங்கள் பரிதாப நிலையில் எழுந்த கேள்விக்கு விடை காண்பதும் சங்கடமானது என்பதை உணர்கின்றேன். உங்கள் வெளிப்பாட்டிலிருந்து நீங்களும் அந்த இளைஞனும் ஒருவரையொருவர் உண்மையாகவே காதலித்தீர்கள்- உள்ளம் திறந்து கருத்துக்களைப் பரிமாறியிருக்கின்றீர்கள் என்பது புலப்படுகின்றது. பெற்றோரின் குறிக்கீட்டால் இத்தூய காதல் இடையிலேயே துண்டிக்கப்பட்டிருக்கின்றதென்று நினைத்தாலும் நீங்கள் தற்போதும் அந்த இளைஞனை உள்ளத்தில் காதலிப்பது புலனாகின்றது.

பிரச்சினை உங்களுடனல்ல - உங்கள் பெற்றோருடன். பெற்றோர் இந்நிலையில் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும். உங்கள் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டவர்களாயின் - நிம்மதியில் ஊக்கமுடையவர்களாயின் - பிள்ளைக்கும் மதிப்பளிப்பவர்களாயின் - இவை எல்லாவற்றுக்கும் மேலாக உங்களை உண்மையாகவே 'அன்பு' செய்வார்களாயின் நிச்சயமாக உங்கள் கருத்துக்களை மதித்து செவிமடுப்பார்கள். பிள்ளைகளின் காதல் ஈடுபாடுகள் பெற்றோர்களுக்குப் பிடிக்காத பட்சத்தில் மனம் திறந்து தங்கள் பிள்ளைகளோடு பேச வேண்டும். அதற்கான காரணங்களை நல்ல முறையில் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்-பிள்ளைகளுடைய மனோதத்துவத்தை அறிந்து பாதிக்காத வண்ணம் அவர்களோடு பகிர்தல் வேண்டும்.

பெற்றோர்கள் தாங்கள் விரும்பாத ஒருவனை தமது மகள் காதலிக்கின்றாள் என்பதற்காக வற்புறுத்தி அதை நிறுத்திவிட்டு வேறொருவனைக் கட்டிவைக்க முயற்சிப்பது எப்பொழுதும் வெற்றியாக அமைய முடியாது. திருமணம் என்பது பூரண சுதந்தரத்துடன் மேற்கொள்ளப்படுவது. முன்பின் தெரியாதவொருவரைத் திருமணம் செய்வது தவறென்று முழுமையாகச் சொல்லவும் முடியாது. ஆனால் திருமணத்தின் பின் முன்பு தெரியாத சில விடயங்கள் பிரச்சனைகள் தெரியவரும்போது வளரக்கூடிய சந்தேக நிலை, வெறுப்பு, கவலை, கண்ணீர் என்பவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் இருந்தால் சரி, ஈற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்யப்போவது நீங்கள் உங்கள் பெற்றோர்களல்ல. ஆகையால் நீங்கள் பொறுப்புடன் விரும்புபவற்றை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் திருமணமென்றால் அந்தஸ்தையோ - பணத்தையோ - குலத்தையோ - பதவி பட்டத்தையோ குறித்து நிற்பதல்ல. அது வாழ்வையும் நிம்மதியையும் - மகிழ்ச்சியையும் குறித்து நிற்கின்றதென்பதை பெற்றோர்கள் பொறுப்புள்ள விதமாக உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

---

# (நாளை)

புதுக் கவிதை

நாளை .........
இன்றைய பாலைவனத்தில்
நித்தம் தெரியும்
கானல் நீர்

அத்திவாரமில்லாத நாளைதான்
எதிர்பார்ப்பு வசந்தங்களுக்கே
அத்திவாரம்.

அதனால்தான்
தினந்தோறும்
நாளைய வரவேற்பை
வாசித்துக்கொண்டேயிருக்கின்றோம்.........
நாளைதான்
நம்மிடம் வரவே மறுக்கின்றது.........

எனவே,
இனி நாளையை மறந்து
''இன்றை'' நினைப்போம்.........
சூரியனிடமே
நாட்களைக் கொடுத்துவிட்டுத்
தவணை முறையில்
பெற்றுக்கொண் டிருக்கின்றோம்.
இன்றைய இருளின்
பிரசவம்தான்
நாளை !

காக்கையின் குஞ்சு
பச்சையாகவா பரிணமிக்கும் ?
எனவே,
''இன்றை'' சீரமைப்போம்.
''நாளை'' சீர்பட்டுவிடும்.

ராணி
முருங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகினில் உயர்வுபெற

நாம் எல்லோரும் உயர்ந்திருக்க வேண்டும். ஆனால் உயர்வு பெற்றவர்,பெறுகின்றவர் ஒரு சிலரேயாகும். நாம் உயர வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? பணத்தால், குலத்தால், படிப்பால், பிற நலத்தால் உயர்ந்தவர்களும் உலகம் போற்றும் உயர்வு பெறுகிறார் இல்லை. ஆகவே பணமும், படிப்பும், குலமும், பதவியும், நிச்சயம் உயர்வைத் தரமாட்டா. மாருக, நமது உள்ள உயர்வே நமது உயர்வுக்கு வழிவகுக்கும்.

நம்மை நாமே சோதித்துப் பார்க்கும் வழக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். இது அனேகரிடம் இல்லை. சட்டைப்பையில் மணிபர்சு இருக்கிறதா? என்று அடிக்கடி சோதித்துக் கொள்கிறோம், பெட்டியிலுள்ள பொருட்கள் பாதுகாப்பாக இருக்கின்றனவா? என சோதித்துக் கொள்கிறோம் ஆனால் நாம் இன்னும் நம்மை மட்டும் சோதித்துப் பார்க்கவில்லை.

காந்திமகான் கடைசிவரை தன் வாழ்க்கையையும் சத்தியத்தையும் சோதித்துக் கொண்டேயிருந்தார். அதனால் தனதுவரலாற்றுக்கு ''சத்திய சோதனை'' எனப் பெயரிட்டார்.

அனேகர், மனைவியைச் சந்தேகித்து அவளைச் சோதிக்கின்றனர். மனைவி கணவனைச் சோதிக்கின்ருள். பண்ணையாளனைச் சோதிக்கின்ருள். ஆனல் தன்னைச் சோதிப்பதில்லை. நம்மை நாமே சோதிப்பதனுலே உள்ளத்திலுள்ள மாசுகள் நீங்கிப் புனிதம் உண்டாகும்.

முதலில் நம் உள்ளத்தில் என்ன இருக்கின்றன? என்ன இருக்க வேண்டும்? என்ன அகல வேண்டும்? என்று சோதிக்க வேண்டும்.

உயிரோடு கூடி வாழ்கின்றவன் யார்? மூச்சுவிடுதலாலும் ஆடம்பரமாக வாழ்வதாலும், நடமாடித்திரிந்தாலும் ஒருவன் உயிர் வாழ்கின்றவனுக மாட்டான். 'அன்பு' நிறைந்த உள்ளம் படைத்தவனே உண்மையாக உயிர் வாழ்க்கை உடையவனுவான். அன்பில்லாதவன், எலும்பின்மீது தோல் போர்த்த ஒரு பொம்மை ஆகும்.

''அன்பின் வழியது உயர்நிலை
அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு'
என்கிருர் திருவள்ளுவர்.

அன்பு என்ருல் என்ன? தொடர்புடையாரிடம் உள்ளத்தில் நிகழும் விருப்பத்திற்கு அன்பு என பலர் கருதுகிருர்கள் அதுபிழை. நம்முடன் தொடர்புடைய மனைவி, மக்கள், நண்பர் முதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரிடம் பயன் கருதி வைக்கும் விருப்பத்திற்கு ஆசை என்று பெயர். அது அன்பாகாது. மனைவிக்கு உயர்ந்த ஆடை, அணிகலன் எடுத்துக் கணவன் தருகிறான். அது அன்பினாலன்று, தான் கண்டு மகிழ வேண்டும் என்று பயன் கருதிச் செய்வதனால் அது ஆசையேயாகும். அதுபோல மகனை நன்றாகப் படிக்க வைக்கின்றான். முதுமைப்பருவத்தில் அவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற நோக்கத்தினாலேயே செய்வதனால் அதுவும் அன்பாகாது. நண்பர்களுக்கு உயர்ந்த விருந்து வைக்கிறான். அவர்கள் தன்னை மெச்சிப் புகழ வேண்டும் என்ற நோக்கமேயாதலின் அதுவும் அன்பு அன்று.

**பயன்கருதாமல் செய்கின்ற செயலே அன்பாகும்.**

பலர் கோயிலுக்குப்போய் கடவுளைத் தொழுவதும் அன்பினாலன்று. கடவுள் நமக்கு வியாபார வளர்ச்சியும், புத்திரப்பேறும் உத்தியோக உயர்வும் தருவார் என்ற நோக்கத்தோடே வழிபடுகிறார்கள். ஆகவே அது அன்பு வழிபாடன்று. ஆசை வழிபாடாகும்.

> **"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்**
> **ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்"**

என்கிறார் திருமூலநாயனார். இப்போது நீங்கள் உள்ளத்தைப் பரிசோதித்துப் பாருங்கள் அன்பு இருக்கிறதா ஆசை இருக்கிறதா என்று. அன்பு பிறவியைக் கெடுக்கும். ஆசை பிறவியைக் கொடுக்கும். ஆசை நிறைந்த உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் விளையமாட்டாது. ஆசை உள்ள இடத்தில் கோபம் வரும். கோபத்தினால் மயக்கம் வரும். ஆகவே எமது ஆசையைக் கூடுமானவரை களைந்து எறிய வேண்டும்.

இனி தொடர்புடையார்மாட்டு பயன் கருதாமல் வைக்கும் விருப்பத்திற்கு பெயர் அன்பு என்று சிந்தித்தோம். அந்த அன்பு தூயது. மனைவியின்பால் பயன் கருதாமல் அன்பு வைக்க வேண்டும். ஆண்டவனிடம் பயன் கருதாமல் அன்பு வைக்க வேண்டும். அன்புடையார் தமது அன்பைப் பிறர்க்குப் பயன்படுமாறு புரிவர். அன்புடையார் தான் உண்மையான மனிதர். ஆசையுடையவர் மனித விலங்குகள்.

அதற்குமேல் அன்பு அருளாக மாறவேண்டும். அன்பில் இருந்து அருள் பெருகும்.

அன்புக்கும் அருளுக்கும் என்ன வேறுபாடு!

அன்பு என்பது தொடர்புடையாரிடத்தில் பயன் கருதாமல் வைக்கும் விருப்பு.

அருள் என்பது தொடர்பில்லாதவர்களிடத்து வைக்கும் கருணை.

அழுகின்ற குழந்தைக்குத் தாய் பால் தருகிறாள் இது அன்பு தெருவில் அழுகின்ற வேற்றுக் குழந்தையை எடுத்து அணைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் பழமும் தந்தால் அது அருளாகும்.

ஆசையுடையார் — விலங்கு
அன்புடையார் — மனிதர்
அருளுடையார் — தேவர்

நீங்கள் யார்? தேவரா? விலங்கா? மனிதனா? இப்போ புரிந்திருக்கும்.

அருள் உடையவரே கடவுளைக் காண்பார். அருள் கண்ணோடு உலகினைப் பார்த்தால் உலகமெல்லாம் கடவுள் தோன்றுவார். பொருளிலும் ஆண்டவனைக் காணலாம். உலகினில் உயர்ந்த உத்தமர்களாய் திகழலாம்.

★ ஐங்கரன் மாஸ்ரர்
கிளிநொச்சி.

Telephone: 24244

KAMAL HARDWARES

DEALERS IN: HARDWARES, ENGINEERING, TOOLS, BRASS, COPPER & LEAD ETC.,

3, Stanley Road,
JAFFNA.

கமால் ஹாட்வெயர்ஸ்

3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியவாதிகள் பாரீர் பாப்பா

இலட்சியம் இலட்சியம் இதுவே எங்கள் இலட்சியம் — என
சத்தமிடும் பல இலட்சிய குரலொலிகளைக் கேட்கிறேன் பாப்பா
தாம் எடுத்த இலட்சியம்தனில் வாழ்ந்து மறைந்திட்ட
பல இலட்சியவாதிகளின் கதைகளைப் படித்திருக்கிறேன் பாப்பா
கால்போன பக்கமெல்லாம் போவதுமல்ல, மனம் நினைத்த
செயலெல்லாம் செய்வதுமல்ல, இலட்சியம் பாப்பா.

நல்மனித வாழ்க்கைதனை அமைத்திட உளத்தில் நற்சிந்தனை
கொள்ளல் வேண்டும் பாப்பா
பற்பல துன்பதுயர அலைகள் எம்மைச் சூழ்ந்து வருத்தினாலும்,
நாம் கொண்ட சிந்தனைதனில் நெறிதவறாது வாழ்வதுதான்
இலட்சியம் பாப்பா
இன்று இவ்வுலகுதனில் வாழ்ந்திடும் பல இலட்சியவாதிகள் பற்றி
நான் கூறுகிறேன் அமைதியாகக் கேட்டிடு பாப்பா.

இப்புவிதனில் அடிமை எவனுமில்லை — என
தார்மீகம் பேசிடுவான் ஒரு இலட்சியவாதி பாப்பா
தம் உரிமைதனைக் கேட்டு குரலெழுப்பினால்
துப்பாக்கி முனைதனில் குரல்தனை அடக்கிடுவான் அவ் விலட்சியவாதி.

ஒருவனுக்கு உணவில்லையென்றால் இவ் ஜெகத்தினை
அழித்திடுவோம் — என
ஏழ்மைதனை விரட்டிட மேடைதனில் உணர்ச்சியுடன் பேசிடுவான்
ஒரு இலட்சியவாதி பாப்பா
தன் வாசல்தனில் பசி எனச் சத்தமிடும் ஏழையின் குரல் கேட்டதும்
வேலையாட்களைக் கொண்டு நாய் போல் விரட்டிடுவான்
அவ் விலட்சியவாதி.

தொழிலாளர் வர்க்கமே உலகில் பெரும் சக்தி — என
தொழிலாளர் தினம்தனில் புகழ்ந்திடுவான் ஒரு
இலட்சியவாதி பாப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் தகுந்த ஊதியம் கேட்டு குரலெழுப்பினுல்
வேலே நீக்கம் கொடுத்து வீட்டிற்கு அனுப்பிடுவான்
அவ் விலட்சியவாதி.

சீதனக் கொடுமையினுல் வாடிடும் மங்கையர்க்கு
வாழ்வளிப்போம் — என
மேடைதனில் கவிமழை பொழிந்திடுவான் ஒரு
இலட்சியவாதி பாப்பா
தான் காதலித்த மங்கையின் பெற்ருேரிடம் அன்பளிப்புக்கள்
தேவையென தன் பெற்ருேர் கேட்டிடும்போது
நான் என்ன செய்ய? எனக் கூறிடுவான் அவ் விலட்சியவாதி.

பெண்கள் நாம் சீதனம் கொடுக்கக் கூடாது — என
சீதனப் போராட்டச் சங்கம் அமைத்திடுவாள் ஒரு
இலட்சியவாதி பாப்பா
மற்றவர்களேவிட அதிகமாக நாங்கள் தருகின்ருேம் — என
மாப்பிள்ளே வீட்டாரிடம் கூறித் தன் மகள் திருமணத்தை
முடித்திடுவாள் அவ் விலட்சியவாதி.

சாதிகள் இல்லேயடி பாப்பா உயர்குல தாழ்ச்சி சொல்லல்
பாவம் — என
பாரதியின் பாடலே தன் வாழ்க்கை என்பான் ஒரு
இலட்சியவாதி பாப்பா
தன் மைந்தனிடம் கண்ட சாதிகளோடும் சேராதே என
கண்டிப்புடன் உத்தரவிடுவான் அவ விலட்சியவாதி.

மக்களுக்குச் சேவை புரிந்து தேவைகளேப் பூர்த்தியாக்குவேன் — என
தேர்தல் மேடைதனில் உறுதி மொழிதனே அளித்திடுவான் ஒரு
இலட்சியவாதி பாப்பா
பதவிதனேப் பெற்றபின் சேவை தேவையெனத்
தேடிவரும் மக்களுக்கு
ஐயா இல்லே எனக் கூறும்படி வேலேயாளிடம் கூறிடுவான்
அவ் விலட்சியவாதி

பல குடியைக் கெடுக்கும் குடிதனே ஒழித்திடுவோம் வாரீர் — என
மது ஒழிப்புப் போராட்டம் நடத்திடுவான் ஒரு
இலட்சியவாதி பாப்பா
வெளிநாட்டுக் குடிவகைக் கடை அனுமதி பெற்று, மது விற்று
மற்றவர் குடிதனேக் கெடுத்து தன் வருவாய்தனேப் பெருக்கிடுவான்
அவ் விலட்சியவாதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியம் கொண்டு வாழ்வது இலகுவல்ல பாப்பா
வாழ்நாள்தனில் இலட்சியம் நிறைவேருமல் போகலாம் பாப்பா
ஆனுல்! கொண்ட இலட்சியந்தனைக் கைவிடலாகாது பாப்பா
நீ உன் வாழ்வு சிறந்திட நல் இலட்சியம் கொண்டு
வாழ்ந்திடு பாப்பா.

—கமலா இளங்கோவன்
குருநகர்
யாழ்ப்பாணம்.


# SAJUNAS

Delears in Fancy Goods &
Presentation Articles.

188, K. K. S. Road,
JAFFNA.

Phone: 23589




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால எதிர்பாராதவைகளை எதிர்கொள்ளும் ஆற்றல் உள்ளவரா?

—ஜீவா போல்—

எதிர்காலம் ஒரு இருட்டறை. அதனுள் நுழைபவர் பல எதிர் பார்ப்புக்களுடன் செல்லுகின்றனர். அவ்வெதிர்பார்ப்புக்கள் சில கை கூடலாம். அதேவேளை, பல நிகழ்ச்சிகள் எதிர்பாராதவைகளாகவே அமைந்துவிடுகின்றன. அவற்றை சரியான முறையில் எதிர் கொள் பவனே ஏற்படும் வளமுள்ள விளைவுகளை, அனுபவிக்க உரிமையுடை யவன். அவன் முறையாக எதிர் கொள்ளவில்லை என்றால் அதற்குக் காரணம் அவனது பக்குவமின்மையும், ஆயத்தமின்மையுமே ஆகும். இசைக்கருவியை நன்கு கற்றுத் தேர்ந்தவனுக்கு இசையில் எழும் புதிய ராகங்களுக்கு, ரசனை வழங்கச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை இவ்வாறு வாழ்வின் கலைகளை அறிந்தவர், புது அனுபவங்களையும், எதிர்பாராத நிகழ்வுகளையும் அலட்சியம் செய்து அவற்றின் சீரிய விளைவுகளை அனுபவிக்கத் தவறமாட்டார்கள். எதிர்பாராத நிகழ் வுகளுக்கு நீங்களும் விதிவிலக்கானவரல்ல என்ற நிபந்தனையில் உங்கள் திறனையும் பரீட்சித்துப் பாருங்கள்!

பின்வரும் சந்தர்ப்பங்களில் என்ன மனநிலையுடன் செயல்படுவீர் என்பதைக் கொடுக்கப்பட்ட மூன்று பதில்களில் ஒன்றைத் தேர்வு செய்து இலக்கத்தை வட்டமிடவும்.

★ ஒரு புதிய வேலைத்தளம், புதிய பாடசாலை, புதிய இல்லிடம், புதிய சூழல் போன்றவற்றில் வாழ ஆரம்பமாகும்போது;-

1. போகப் போகப் பழகிக் கொள்ளலாம் தானே!
2. புதிய வளர்ச்சி!
3. ஏதாவது இடையூறு வந்தே தீரும்!

★ ஒரு நேர்முகப் பரீட்சை அல்லது போட்டி ஒன்றிற்கு தோற்றப் போகின்றீர்:-

1. என்னால் இயன்ற அளவு முயற்சி செய்வேன்!
2. இம்முறை அதிஷ்டம் எனக்கே!
3. என்னுடைய தராதரம் போதாது!

★ என்னைச் சூழ்ந்து பலதரப்பட்ட மாற்றங்கள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அவற்றை ஒருவாறு சகித்துக் கொள்வேன்!
2. அவை கடினமாக இருப்பினும் நன்மைக்கே!
3. சோதனைக்கு மேல் சோதனைதான்!

★ நண்பர்கள், அறிமுகமானவர்களிடம் இருந்து பிரிந்து புதியவருக்கு அறிமுகமாகின்றீர்!

1. உறவுகள் நிரந்தரமானவையல்ல; பழகிக் கொள்வோம்!
2. புதிய முகங்கள் நல்லவர்களாக இருக்கலாம்!
3. புதியவர்களை எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது!

★ முன்னேறுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன:-

1. பயன் படுத்தினால் நல்லவையே!
2. அதிஷ்டமானவரே, எதிர்பார்த்தே இருந்தேன்!
3. என் தற்போதைய நிலையே மிகவும் பாதுகாப்பானது!

★ பொறுப்பு ஒன்றை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது:-

1. சரி, நான் ஏற்கின்றேன், ஆனால் அதிகம் எதிர்பாராதீர்!
2. கவலையில்லை, எல்லாம் திறமையாக நடைபெறும்!
3. என்னால் முடியாது, எல்லாம் குழம்பி விடும்!

★ உடல்நோய் ஏற்பட்டு விட்டது:-

1. கூடிய விரைவில் சுகம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்!
2. நிச்சயம் சௌக்கியம் பெற்றுவிடுவேன்!
3. ஒருவேளை நிரந்தர நோயாளியாகிவிடுவேனோ!

★ ஏனையோர் உம்மில் அதிக பட்சமும் கரிசனையும் காண்பிக்கிறார்கள்:-

1. நிரந்தரமானவை என எதிர்பார்க்கின்றேன்!
2. எவ்வளவு மகிழ்ச்சி. மக்கள் என்னை ஏற்றுக் கொள்ளுகிறார்களே!
3. ஏதோ காரணம் இருக்க வேண்டும்!

★ உம்மில் எல்லோரும் குறை காண்கின்றனர்!

1. அவர்களுக்கு என்னைப் புரிய வைக்க வேண்டும்!
2. அவர்களே ஒரு நாள் கண்டு உணர்ந்துகொள்வர்!
3. ஒருவருக்கும் என்மேல் அன்பு இல்லை என்பதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தும் சுமுமாகவே நகருகின்றன:-

1. சீராக இருக்கட்டும், தற்பெருமை வேண்டாம்!
2. நன்று! எப்படி இருப்பினும் ஏற்றுக் கொள்வோம்!
3. ஜாக்கிரதை குழப்பம் ஏதாவது நடைபெறலாம்!

வட்டமிட்டுக் குறித்த எண் 1க்கு புள்ளிகள் முறையே 5; எண் 2க்கு — 10 புள்ளிகளும்; இடுக. மொத்தம் 80க்கு மேற்பட்டால் மிகத்திறமை. மொத்தம் 60க்கு மேற்பட்டால் நன்று. நிகழ்காலத்தை எதிர்நோக்குவது போன்றே எதிர்காலத்தையும் எதிர் கொள்வோம். எனவே, நிகழ்காலத்தை திருப்தியுடன் வாழ்ந்தால் எதிர்காலத்தில் ஏற்படும் எதிர்பாராத தாக்கத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப் பக்குவம் உடையவராவீர் என்பது இப்பரீட்சையின் முடிவு.

## மகாத்மா காந்தியடிகளின் கருத்துரைகள்

1 மிதமாகப் பேசுக
2. எவர் எது சொன்னாலும் கேட்டுக் கொள், உனக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்க.
3 ஒவ்வொரு நிமிடத்தையும் முக்கியமாகக் கருதிக் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்க
4. ஏழைபோல் வாழ். செல்வத்தில் பெருமை கொள்ளாதே.
5 நீ செய்யும் செலவிற்குக் கணக்கெழுதுக.
6. மனம் ஒன்றிக் கல்வி கற்றுக் கொள்க.
7. நாள்தோறும் உடற்பயிற்சி செய்க.
8. அளவோடு சாப்பிடுக.
9. நாள் தவறாமல் நாட்குறிப்பெழுதுக.

மில்க்வைற் தயாரிப்புகளின்
மேலுறைகளைச்
சேகரித்துக் கொடுத்து
பெறுமதி வாய்ந்த பரிசுகளைப்
பெற்றுக் கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் இலட்சியமா ?

செல்வி T. M. றேசலீன்
சண்டிலிப்பாய்

ஆசைபல காட்டிப் படுகுழியில் தள்ளிவிட்டு
பார்த்தவரின் கண்களையோ பவுத்திரமாய் மூடிவிட்டு
மாயமாய் மறைந்துவிட்டான் என் அன்பே என்றுவிட்டு
உலகினுக்கே தெரியாது
ஒளிந்திருக்கும் இலட்சியமோ ?

ஏங்குகிருள் கன்னி — அவள்
என்னியவை கிடைக்காமல்
ஏங்கவைத்த அப்பாதகனே
எங்கேயோ போய்விட்டான்
அங்கவனைக் காணுது
கன்னியவள் துடிக்கையிலே
தாங்குகிருள் நண்பியவள்
தயவாகக் கடிகின்ருள்

நண்பியவள் தாங்கினலும்
நல்லவன்போல் நடித்து
பாசாங்கு செய்த பாதகனைக் கடிந்தாள்
இவையனைத்தும் எண்ணி எண்ணி
இரவு பகல் கலங்கிவிட்டு
இறுதியிலே தலை விதி மேல்
பழிதனையே போடுகின்ருள்.

காதலிலே துயில் கொள்ளும் கன்னியரே
பல மலரில் தேன் குடிக்கும்
வண்டுகளை நம்பாதீர்
ஆசையிலே தவழும் ஆடவரே கேளீரே
பல மலரில் தேனெடுக்கும்
செய்கையினல் பூக்களெல்லாம்
வீணுய் அழிகிறதே தீயவழி விடுவீரே
விரைவாக ஒளி கொடுப்பீர் இருள் ஆழ்ந்த உலகினிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய வாழ்வு

— எஸ். கே. ஜெசாய்ஜே —

எந்தவொரு மனிதனது வாழ்க்கையிலும் ஓர் இலட்சியம் அல்லது குறிக்கோள் இருத்தல் இன்றியமையாததாகும். எப்படியும் வாழ்ந்து விடலாம் என்று மனிதன் நினைத்து வாழ்வது மனித வாழ்க்கையல்ல. இப்படித்தான் வாழ வேண்டுமென்ற இலட்சியம் கொண்டு வாழும் போது தான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக - பொருள் பொதிந்ததாக அமைந்து விடும். இன்று உலகத்தால் புகழ்ந்து மேற்கோள் காட்டப் படும் உத்தமர்களெல்லாம் ஒரு இலட்சியத்துக்காக வாழ்ந்து அதற்காக மடிந்தவர்களே.

இலட்சிய வாழ்வு என்பது ரோசாமலர் நிறைந்த படுக்கை யல்ல. மாருக ரோசா முட்கள் நிறைந்த படுக்கை. அது மென்மையான பாதையல்ல. மாருக இன்னல்கள் நிறைந்த வாழ்க்கையே. எனவே இலட்சியம் கொண்டு நாம் வாழும்போது வாழ்க்கையில் பல இடர்கள் வரத்தான் செய்யும். அவற்றைக் கண்டு நாம் பின்வாங்கி விடக் கூடாது. வாழ்க்கையிலே இலட்சியத்தை மனதில் கொண்டு வாழ்ந்தவர்களின் வாழ்க்கைச் சரித்திரங்கள் அவர்களின் உள்ள உறுதியையும், சகிப்புத் தன்மையையும் பிறரது தவறுகளை மற்றவர்களை மற்றவர்களாகவே புரிந்து ஏற்று வாழ்ந்த தன்மையையும் பிறரது தவறுகளை மறந்து, மற்றவர்களை மன்னித்து வாழ்ந்த வாழ்க்கையையும் எமக்குக் காட்டிய வண்ணமே உள்ளன. எனவே எதையும் தாங்கும் இதயத்துடன் வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திக்கும் மனத்திடன் ஒவ்வொரு இலட்சியவாதிக்கும் இருத்தல் மிக மிக அவசியமானதாம்.

இன்றைய மனிதன் அரசியல் பிரச்சனை. சமூகப் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை, உளவியற் பிரச்சனைபோன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாழவேண்டியவனுக உள்ளான். இப் பிரச்சனைகள் அவனை நாலா பக்கமும் நின்று நசுக்கும்போது அவன் எப்படியும் வாழலாம் என்ற வகையில் மனம் போன போக்கிலே மனச்சாட்சியை மறந்து குறிக்கோளற்று, இலட்சியத்தை மறந்து வாழ முற்படுகின்றுன். இதனுலேயே எமது சமுதாயத்தில் இன்று கொலையும், கொள்ளையும், கற்பழிப்பும், இன ஒழிப்பும், தீ வைப்பும், வஞ்சகமும், சூதும், வாதும் நிறைந்து பல அநியாயச் செயல்களும், அட்டூழியங்களும், அடாவடித்தனங்களும் மலிந்து காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் நாம் உற்று நோக்கும்போது மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் முழுமையை, அதன் மேடு, பள்ளங்களை முற்றாகச் சுவைக்காது எப்படியும் வாழ்ந்து விடலாம் என்று வாழ்வதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இலட்சிய வாழ்வானது உயர்ந்த எண்ணங்களுக்கான வாழ்வாக அமையும்போது அதன் கனிகள் மிகச் சுவையானவையாக இருக்கும். இலட்சியமற்று வாழும் வாழ்க்கையானது கடிவாளம் பூட்டப்படாத குதிரையின் ஓட்டத்தைப் போன்றதாக இருக்கும். அது எந்த வழியில் எப்படிச் செல்லும் என்று எவருமே சொல்ல முடியாத அளவில் அமைந்துவிடும். எனவே, கடிவாளம் பூட்டிய குதிரை போன்று இலட்சியங்களை மனதில் நிறுத்தி நாம் வாழ்க்கையில் நெழிவு, சுழிவுகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்தால் எமது வாழ்வு எதிர்காலச் சந்ததிக்கு எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் எதுவித சந்தேகமுமே இல்லை.

"கொள்வோம் இலட்சியம் -
அதை
வாழ்வோம் வாழ்க்கையில்"


★ வாசகர்கள்,

★ விளம்பரதாரகர்ள்



மற்றும்

★ ஆதரவாளர்கள் அனைவருக்கும்

மகிழ்ச்சி நிறை

கிறிஸ்மஸ் வாழ்த்துக்களும்

மங்களகரமான

புதுவருட

சோபனமும்

உரித்தாகுக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக் குவியல் 29



# உயர்ந்த இலட்சியம் அதனை அடையும் வழிகளை நியாயப்படுத்துமா?

## நியாயப்படுத்தும் 1

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

இவ்வாறு மானிடப் பிறப்பின் மகத்துவத்தை, அதன் மாண்பை குறள் வடிவில் தெளிவுபடுத்துகின்றான் தமிழ்ப் புலவன் வள்ளுவன். அதற்காக தாயின் வயிற்றில் கருவாகி வெளியேறும் போதே புகழோடு தோன்ற வேண்டும் என்று கூறுவதற்கில்லை. எனினும் உருவாகிய மனிதன் தான்கொண்ட இலட்சியத்திற்காக இடையறாது உழைக்கும் வரையில் அவன் புகழோடு தோன்றியவன் தான்,

"ஒன்றை இழந்தால் தான் இன்னொன்றின் சுகத்தைப் பெறமுடியும்
எதை அடைய விரும்புகிறோமோ எந்த மாபெரும் காரியத்தை
சாதிக்க விரும்புகிறோமோ அந்தக் காரியமே நம் வாழ்க்கையின்
குறிக்கோள் ஆகி விடும்போது மற்ற இன்பமெல்லாம் அற்பமாகி
விடுகின்றன"

என்று கூறுகின்றார் ஓர் அறிஞர். இவ்வாறு தன்னை முற்றும் துறந்து ஏன் தன் வாழ்வையே தியாகம் செய்து தான் கொண்ட இலட்சியத்தை நிறைவேற்ற ஒருவன் மேற்கொள்கின்ற வழிகளை அவனது இலட்சியம் நியாயப்படுத்தியே தீரும்.

இறைமகன் கிறீஸ்து நமது மீட்புத் திட்டத்திற்காக சிலுவையில் தொங்கி, இரத்தம் சிந்திய அந்த இலட்சியப் பாதையில் அவர் சென்ற வழிகளை, அவரது உயர்ந்த இலட்சியம் நியாயப்படுத்துகின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சென்ற பாதையில் அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்களை வரைவிலக்கணப்படுத்த முடியுமா? எனினும் அவற்றை மேற்கொண்ட அவர் சாடவேண்டிய வேளையில் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே என்று சாடியும் அவர்களது நிர்ப்பந்தங்களுக்கு கட்டுப்படவேண்டிய வேலையில் கட்டுப்பட்டும் தனது இலட்சியத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கு அவர் சென்ற வழிகளை அவரது இலட்சியம் நியாயப்படுத்துகின்றது தானே.

ஆகவே. உயர்ந்த நோக்கம் ஒன்றையே கருத்திற் கொண்டு, அதற்காக உழைக்கும் இலட்சியவாதி செல்கின்ற வழிகளை அவன் கொண்ட இலட்சியம் நியாயப்படுத்தியே தீரும்.

ஜெயரூஸ் யோசவ்
பெரியவிளான்

## நியாயப்படுத்தும் 2.

கனியிடை ஏறிய சுளையும் — முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் — காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் — தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் — தமிழை
என்னுயிர் என்பேன் காண்பீர்.

இவ் இலட்சியவாதி பாரதிதாசனின் கானம் என்ன? எதற்கு எது இனிமை பயக்கினும், அவனது இலட்சியம், தமிழிற்குத் தன்னைக் கொடுப்பது, அவ்விலட்சியம் காட்டும் வழி. அவனுயிரினை எவ்வளவு மதிக்கின்றானோ அஃதளவு தமிழினையும் மதிக்கின்ற நிலை. இது இலட்சியம் அமைக்கின்ற "நியாயவழி முறை" சந்தேகமா? தொடர்ந்து மேலே படியுங்கள்.

## ★ இலட்சியம் என்றால் என்ன?

இலட்சியம் என்ன பகடைக் காயா? தான் நினைத்த வழியிலெல்லாம் உருண்டு புரண்டு செல்ல ..? இல்லையே! அது திட்டமிடப்பட்டு, தீர்மானிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு, செயல்படுத்தப்படவேண்டியதொன்று. நினைப்பதையெல்லாம் கூறிவிட்டு "இது தான் என் இலட்சியம்" என்று குளறும் விசிறிகளையெல்லாம் இலட்சியவாதிகள் என்று கூறமுடியும்? அப்படியாயின் நிச்சயமாக அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வழிகளை நியாயப்படுத்தாது. மாருக, உண்மையாக, தன்னை, தன் நிலையை, தன் எதிர்காலத்தை, அதற்கான இன்றைய ஆயத்தங்களை — இவற்றையெல்லாம் ஒழுங்கு பண்ணி, அதன் பின்னணியில் பேனுவைத் தூக்கிப் பேப்பரில் வரைகின்ற அந்த வரிகளே ஓர் இலட்சியவாதியின் உண்மையான இலட்சியக் கனவாக இருக்க முடியும். இந்த இலட்சியக் கனவு அதனை அடையும் வழிகளை நியாயப்படுத்துகின்றதல்லவா? அப்படியாயின் உண்மையாக இலட்சியத்திற்கும் நியாய வழிவகைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கத்தான் செய்கின்றது.

## இலட்சியத்திற்கும் அதனை அடையும் வழியமைப்புக்கும் இடையிலான இறுக்கமும் — இணைப்பும்

ஓர் உண்மையான இலட்சியவாதியின் இலட்சியம், சாதாரண 20-ம் நூற்ருண்டு சினிமாக் காதலர்களின் இலட்சிய அமைப்புக் கொண்டதல்ல. அது இன்று இவளை விரும்பி, நாளை அவளை ஏமாற்றி மறுநாள் அடுத்தவள் ஒருத்தியை மணந்து கொள்ளும் சாதாரண — இல்லை, கீழ்த்தர காதல் கனவுலகல்ல. மாருக, ''அடையும் வழியமைப்பின்றி இலட்சியமேது?'' என்பது போல அத்தனை தூரம் இலட்சியத்திற்கும் அதனை அடையும் வழி வகைக்கும் ஓர் இறுக்கமுடையதாகக் காணப்படுவதொன்று. இப்போது சொல்லுங்கள்; இலட்சியமென்ன — தனது வழிகளை நியாயப்படுத்தவில்லையா?

## குறைபாடுகள்

குறைபாடுகள் என்ற ரீதியிலோ நாம் 4 முக்கிய கட்டங்களை நோக்க வேண்டும்.

1. இலட்சியத்தினை அமைக்கின்ற நபரின் தகுதியின்மை.

2. குறிப்பிட்ட நபர் அமைக்கும் இலட்சியத்தின் உறுதியின்மை.

3. அந்த இலட்சியம் நியாயப்படுத்தும் வழி பின்பற்றப்படாமை.

4. இது மூன்றும் இருப்பினும் கூட அந்தக் குறிப்பிட்ட நபருக்கான விதி — இறைவனின் நியதி — வேறுபடுகின்ற பட்சம்.

எனவே, மேற்குறிப்பிட்ட 4 குறைபாடுகளும் நிறைவடைகின்ற வேளையிலோ நிச்சயமாக ஓர் உயர்வான இலட்சியம், அதற்கான வழி முறைகளை நியாயப்படுத்தும் என்பது வெள்ளிடை மலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுதிப்பாடு

அன்றைய காலந்தொட்டு பரம்பரை பரம்பரையாக ஆண்டுவரும் கல்தோன்றி மண் தோன்ருக் காலத்து மூத்த குடியின் செந்தமிழ் மாமன்னர்களெல்லோரும் படைத்த இலட்சிய வரலாறு உண்மையாகவே அவ்விலட்சியங்களுக்கான நியாயவழியினை நெறிப்படுத்தியிருக்கின்றது. முல்லைக்கு தேர் கொடுத்த பாரி மன்னனும், பருந்திற்குத் தன் தசையைத் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும், குற்றத்தின் தீர்ப்பான மரண தண்டனையைத் தன் மகனுக்கும் விதித்து மனுநீதி கண்ட சோழனும், பசியால் வாடிய ஒளவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த அதிகமானும், ஏன் — உள்ளதையே அளித்துவிட்டு வனவாசம் நாடிய மன்னன் குமணனும், எமக்கென விட்டுச் சென்றது அவர்களது இலட்சிய வாழ்க்கை முறையே. இந்த இலட்சியங்கள் காட்டிக் கொடுத்த வாழ்க்கையே — வழியே அவர்களுக்கு இறுதிவரை கை கொடுத்தது. எனவே ஓர் உயர்ந்த இலட்சியம் அதனை அடையும் வழிகளை நியாயப்படுத்துமென உறுதி கூறி நிற்கின்றேன்.

குயின்ரஸ் துரைசிங்கம்
ஊர்காவற்றுறை.

## நியாயப்படுத்தும் 3

"நீறில்லா நெற்றி பாழ்
நெய்யில்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்
இலட்சியம் இல்லா வாழ்க்கை பாழ்."

என்ருர் தமிழ் புலவன் ஒருவன்; வளமான வாழ்விற்கு இலட்சியம் தேவை. "உயர்ந்த இலட்சியங்கள் தான் உயர்ந்த உள்ளங்களை அமைக்கின்றன." அதாவது, மனிதன் தனது சமூக வாழ்வில் ஒரு நிறைவை, உயர்வை, முன்னேற்றத்தைக் காண விழையும் உயர்ந்த நோக்கு அல்லது இலக்கு என்று கூறிக் கொள்ளலாம்.

சிறு வயதிலிருந்து ஒவ்வொரு மனிதனின் மனதினில் உதயமாகும் இலட்சியங்கள் தான் எதிர்காலத்தில் அவர்களின் வளமான வாழ்விற்கு வழிவகுத்து விடுகின்றது. உளமதில் ஏற்படும் உயர்ந்த இலட்சியங்களே கல்விமான்களையும், கவிஞர்களையும், நல்ல தலைவர்களையும் உருவாக்குகின்றது. இதனை அடைவதற்கு சில வழிவகைகளைக் கையாளலாம். சிலர் அத்தகைய வழிகளைக் கையாளுவதன் மூலம் இலட்சியங்களை அடைந்து விடுகின்றனர். ஆனுல் அவ்வாறு, இலட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியத்தை அடைய முடியாதவர்களுக்கு சரித்திரம் படைத்த காந்தியின் கூற்று சாந்தி அளிக்கும்.

"ஒருவன் எந்தளவிற்கு தனது இலட்சியத்தை
நிறைவேற்ற முனைந்தும் அதனை அடையாது
விட்டானோ, அந்தளவிற்கு அவன் தனது
இலட்சியத்தில் வெற்றி பெற்றுள்ளான் என்பதாம்."

இத்தகைய இலட்சியத்திற்கு முன்னோடியாக ரோபட் புரூஸ், நெப்போலியன் போன்ற தலைவர்களையும் குறிப்பிடலாம். எனவே, மனித வாழ்விற்கு இலட்சியங்கள் தேவை. அவை இலட்சியங்களாக இருந்தால் நிச்சயமாக அதனை அடையும் வழிகளை அது நியாயப் படுத்தும்.

உயர்ந்த இலட்சியங்களை அமைக்கும் உள்ளங்களில் பள்ளங்கள், பாறைகள் குறுக்கிடலாம். ஆனால் அந்தளவிற்கு இலட்சியத்தை அடையலாம் என்ற மனப்பக்குவத்தில் வாழ்ந்தால், வளமான வாழ்வில் வெற்றியை அடையலாம். "**இலட்சங்கள் அழியலாம். ஆனால் இலட்சியங்கள் அழியாது**" என்பது திண்ணம்.

செல்வி பெப்பி பீரிஸ்
வங்காலை

## நியாயப்படுத்தாது 1

மனிதன் ஒரு சமூகப் பிராணி. எனவே அவன் தனி மனிதனாக, ஒரு வெற்றிடத்தில் இயங்குவது சாத்தியமன்று. அவன் இன்னொரு பெரியதோர் சமூகத்தில் (கிராமம், நகரம், மாவட்டம், நாடு) தான் இயங்குகின்றான். ஆகவே, எத்தகையதோர் இலட்சியத்தையடைய வழிவகுப்பினும், அந்தப் பெரிய சமூகத்தில் இயங்கும் மற்றைய மனிதர், கட்சிகள், கழகங்களின் சுதந்திரத்துக்குத் தடையாகா வண்ணம் இயங்குவது அத்தியாவசியம். அப்பொழுதுதான் எந்தவொரு இலட்சியமும் உன்னத நிலையை அடைய முடியும்.

சோஷலிச நாடுகளெனப்படும் ரஷ்யா போன்ற பொதுவுடைமை நாடுகளில் புரட்சிக்கு அடித்தளம் நாட்டிய கட்சிகள், "ஒரு உயர்ந்த இலட்சியம் அதனை அடையும் வழிகளை நியாயப்படுத்தும்" என்ற கொள்கையின் அடிப்படையில்தான் இயங்கின. அதன் விளைவு என்ன என்ன என்பதற்கு வரலாறு சாட்சியாகும். பாட்டாளி வர்க்கத்தின் வாழ்வுக்காக முதலாளி வர்க்கம் ஒழிக்கப்பட்டது. ஆனால் இன்று அரசாங்கம் எனும் பிறிதொரு முதலாளி வர்க்கம் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலியத்தில் கிறிஸ்து மகானின் கூற்று அன்றும், இன்றும், என்றும் அர்த்தமுள்ளதாகவே தோன்றுகின்றது. ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் எனக் கூறக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு'' என்கிறார் கிறிஸ்து. இதனை வழியாகக் கொண்டு இலட்சியத்தை அடைய முயன்றவர்களில் மகாத்மா காந்தியும், மார்டின் லூதர்கிங்கும் சிறந்த உதாரணங்களாவர். அகிம்சையே இவர்களது ஆயுதமாக அமைந்தது.

இவற்றை உற்று நோக்குமிடத்து யான் வலியுறுத்திக் கூற விளைவது யாதெனில், இலட்சியங்கள் எவவளவு உன்னதமாயினும் அவற்றையடைய மேற்கொள்ளும் **வழி வகைகள் அனைத்தும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நியாயமானவை அல்ல. மாறாக ஒரு இலட்சியத்தை அடைய முயலும் வழி நியாயமானதாயின் அந்த வழி அவ்விலடசியத்தை ஒரு உன்னத நிலைக்கு உயர்த்தும்.**

**எம். லெனுட்.**
**கண்டி**

## நியாயப்படுத்தாது 2

வாழப்பிறந்த மனிதன் வாழவே துடிக்கின்றான், துவள்கின்றான், திட்டங்கள் தீட்டுகின்றான், அவனது ஒளிமயமான எதிர்காலத்தை யிட்டு, அவனது உயர்ந்த இலட்சியத்தை முன்வைத்து, இதற்காகப் பல தியாகங்கள் செய்கின்றான். இதற்காக அவன் தனது வாழ்க்கையில் போராடும் போது பலபிரச்சினைகள் கஷ்டங்கள், துன்பங்கள் அவனை வாட்டி வதைக்கின்றன. எனினும் அவன் தனது இலட்சியத்தை அடைவதற்காக இவைகளை எதிர்த்துப்போராடி, எதிர்நீச்சல் போட்டு அவ் இலட்சியத்தை அடைய முற்படுகின்றான்.

ஒரு குடும்பஸ்தன் தனது குடும்பம் ஒரு உன்னதமான, பலராலும் போற்றப்படக்கூடிய குடும்பமாக வாழ வேண்டும் என்னும் இலட்சியத்தைக்கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உழைக்கின்றான். ஆனுல் இவன் எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்தும், தன் இலட்சியத்தை நிறைவேற்றி தனது வாழ்க்கைச் சக்கரத்தை ஒட்டமுடியாத நிலையிற்கு அவன் உட்படுத்தப்படுகின்றான். எனவே அவன் மனதில் ஒரு விரக்திமனப்பான்மை ஏற்பட்டு தனது இலட்சியமாகிய தனது குடும்பத்தைப் பேரோடும் புகழோடும் வாழவைக்கவேண்டுமென்ற தனது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக குறுக்குவழியில் (களவு, இலஞ்சம்) பணம்தேட முற்படும்போது அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது அந்த உயர்ந்த இலட்சியம் அதனை அடையும் வழிகளை நியாயப் படுத்தாதுபோகின்றது.

அவ்வாறே ஒரு மாணவன் நன்குகப்படித்து ஒரு வைத்தியனு வோ அல்லது தொழில்நுட்பவியலாளனுகவோ வந்து தன்னை நம்பியிருப்பவர்களை, தான் கடமைப்பட்டுள்ளவர்களை வாழவைக்க முற் படுகின்றுன். பரீட்சைக்குத் தோற்றுகின்றுன் ஆனுல் அவனுக்குக் கிடைப்பதோ பரிதாபமான முடிவு. இதனுல், குறுக்கு வழியில்தான் செல்லவேண்டும் என்ற உணர்வு பொங்க, பரீட்சையில் ஆள்மாருட்டம் செய்து, இலஞ்சம் கொடுத்து வெற்றியும் பெற்றுவிடுகின்றுன். இவ்வாருக, இவன் தனது இலட்சியத்தை நிறைவேற்ற குறுக்குவழிகளில் முயற்சித்தபோதும், முயற்சியில் வெற்றிகண்டபோதும் அவனது அந்த உயர்ந்த இலட்சியமானது அதனை அடையும் வழிகளை நியாயப்படுத்தாது போகின்றது.

மேலும், ஒரு இளைஞன் ஒரு யுவதியை விரும்புகின்றுன். தான் அவளை அடையவேண்டும் என்றும், தான் அவளுடன் தனது வாழ்நாள் முழுவதும் வாழவேண்டுமென்று விரும்புகிருன். ஆனுல் அவளோ இவனை விரும்பவில்லை. இது அவனுக்குத்தெரியவரவே அவன் தனது இலட்சியத்தை அடைவதற்காக குறுக்கு வழியைக் கையாண்டு அவளைப் பலாத்காரமாக தூக்கிச்சென்றே அல்லது அவளுக்கு எதிராகச் செயற்பட்டோ அவன் தனது இலட்சியத்தை அடைய முற்பட்டால் அந்த உயர்ந்த இலட்சியம் அதனை அடையும் வழிகளை நியாயப்படுத்தாது போய்விடுகின்றது. ஓர் உயர்ந்த இலட்சியமானது அதனை அடையும் வழிகளை நியாயப்படுத்தாது என்பது தெளிவாகின்றது.

யோ. அ. இம்மானுவேல்
வசாவிளான்.

நிலையில்லாதனவற்றின்
மத்தியில் நின்றுகொண்டு
நிலையானவற்றைப் பார்ப்பதுதான்
கல்வியின்நோக்கமாக
இருத்தல் வேண்டும்.

— விபுலானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சமுதாயம் படைக்க . . .

**P. S. தேவி,** *புங்குடுதீவு - 10*

உலகிலே உயிர் வாழும் பிராணிகள் ஒவ்வொன்றினது வாழ்க்கையிலும் ஒவ்வொரு இலட்கிய முண்டு மனிதர் வாழ்க்கையிலும் இலட்சியம் உண்டு, இன்னும் பறப்பன, ஊர்வன முதலியவற்றின் வாழ்க்கையிலும் இலட்சிய முண்டு. ஆனுல் இவை ஒவ்வொன்றினது இலட்சியமும் வேருனவை, வித்தியாசமான வழியில் செல்வன.

நாட்டுக்காக, தன் வாழ்வை நல்குவதுதான் வாழ்க்கையில் இலட்சியமென்று ஒருவன் கருதிக் கொண்டிருக்கும் சமயத்தில் நாட்டை எவ்விதமாகச் சுரண்டி வாழலாம் என்பது மற்றவனது இலட்சியமாக இருக்கும். பொய் பேசிப் புகழ் சம்பாதிப்பதையே புலவர்கள் தங்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கும் சமயத்தில் மெய்பேசி இன்னலுறுவதையே இலட்சியமாகக் கொண்ட மகாத்மாக்கள் இருக்கத்தான் செய்கிருர்கள்.

மக்கள் வாழ்க்கை தெளிவும் நாகரீகமும் உடையதாக விளங்க வேண்டும். எல்லோரும் நலமாகவும் வளமாகவும் வாழவேண்டும். ''யாதும் ஊரே யாவரும்கேளிர்'' என்ற குறிக்கோளுடன் வாழ வேண்டும். **''நீயும் வாழ், மற்றவனையும் வாழவிடு''** என்ற பரந்த நோக்கத்துடன் வாழவேண்டும்.

வாழ்க்கையிலே கொண்டிருக்கும் இலட்சியங்கள். இன்னல்கள் பல. அடுத்தடுத்து வரினும் நிலைகுலையாதனவாக இருக்க வேண்டும். வாழ்க்கைப் பொய்கையில் கலக்கம், விசாரம் ஆகிய அலைகள் வீசாமலிருக்க வேண்டும். அஞ்சியும், கெஞ்சியும் வாழும் வாழ்க்கை நீக்கப்பட வேண்டும். ஐந்தடுக்கு மாடியிலே - கொஞ்சு மொழியாள் மடியிலே இந்திர போகம் அனுபவிக்கும் வாழ்க்கையும், கஞ்சிக்கு வழியின்றிக் கந்தையின்றி அலையும் வாழ்க்கையும் ஒழிக்கப்பட வேண்டும்!

இலட்சியமில்லாதவருக்கு இன்றைய உலகிலே இடம் கிடையாது! அவன் நடைப் பிணமாகவே மற்றவர்களால் மதிக்கப் படுவான். இலட்சிய வாழ்க்கை நடத்திய பலர் நம் வாழ்நாளில் வாழ்ந்திருக்கிருர்கள். உலகப் பெரியார் காந்தி, பொய். பொருமை, பித்தலாட்டங்களை அறவே நீக்கி அன்பும், அஹிம்சையும் நிறைந்த இந்தியாவை உருவாக்க வேண்டுமென்ற இலட்சியத்திற்காகப் பாடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு அரசாள உரிமை உண்டு. பரம்பரை பரம்பரையாக பாராளும் வம்சத்தில் வந்த நாம் வெள்ளையருக்கு அடிமையாவதா?

ஆலயம் குறிக்கப்பட்ட சிலரின் ஏகபோகச் சொத்தல்ல.

ஆண்டவன் சந்நிதி அனைவருக்கும் பொது .....

இவை காந்தியடிகளின் இலட்சியங்களாக இருந்தன.....

ஒருவன் புகழடைவதைக்கண்டு உள்ளம் கொதிப்பது. ஒருவனிடத்திலுள்ள சக்திகள் தங்களுக்கு இல்லையே எனப் பொறுமைப்படுவது: ஒருசிலரின் இலட்சியமாக இருக்கும் நேரத்தில் பரந்தநோக்குடனும் விரிந்த நோக்கத்துடனும் மற்றைய நாட்டவர் நம்மைப் பின்பற்ற வேண்டும் — தலை நிமிர்ந்து நின்ற இனம் தழைத்து வாழவேண்டும் என்பன போன்றவை வேறு சிலரின் இலட்சியங்களாக இருக்கும்.

இலட்சியம் இல்லாதவனை இன்றைய உலகம் வரவேற்காது, அவர்களால் தலை நிமிர்ந்துவாழவும் முடியாது. இலட்சியம் சந்தையில் விற்கப்படும் சரக்கல்ல. தன்மான உள்ளத்தை—சீர்திருத்தப் போர்க்களத்தை — அறிவுப் புரட்சியை அன்பு எழுச்சியை — புத்துணர்ச்சி கொண்ட சமுதாயத்தை புதிதாய் படைப்பது இலட்சியமே.

மக்கள் வாழ்க்கையில் இலட்சியமிருக்க வேண்டும். இலட்சியத்துக்கு இரத்தம் சிந்தத் தயாராக இருக்க வேண்டும். இடுக்கண் மேல் இடுக்கண் அடுத்தடுத்து வந்தாலும் அயரக் கூடாது! அஞ்சக் கூடாது! பிறர் எள்ளி நகையாடுவதைக் கண்டு உள்ளம் சோரக் கூடாது. அள்ளியெறியவும் அலைகளைப் போல கொள்கைகள் நாற்புறமும் துள்ளிப் பரவவேண்டும். அப்போது தான் மறு மலர்ச்சி கொண்ட சமுதாயத்தை காண முடியும்.

---

சம்பிரதாயங்களுக்காகவும்,
அற்ப விடயங்களுக்காகவும்
மற்றவர்களின் கெடுபிடிகளுக்காகவும்
ஒரு நல்ல இலட்சியத்தை
சிதறடிக்க விடாதே.

—எஸ். எஸ். லட்சுமி
காங்கேசன்துறை

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஏழு நாட்கள்

அந்த ஏழுநாட்கள் திரைப் படத் திறனாய்வை வாசித்தேன். உளவியல் ரீதியானதும், முற்போக்குச் சிந்தனையுடையதுமான 'நான்' சஞ்சிகை சில நியாயமில்லாத சம்பிரதாயங்கள் சடங்குகளில் மறைய எத்தனிப்பது கவலைக்குரியதே! இவ் விமர்சனத்தின் முதலாவது பந்தியை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் எனது கருத்தை வலியுறுத்த அவற்றையே ஆதாரமாக்குகின்றேன்.

'திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்; ஆம். ஏற்றுக் கொள்கிறேன். ஆனல் ஆயிரம் காலம் வாழவேண்டிய அப்பயிரின் ஆரம்பத்திலேயேஒருவடு ஏற்படும் போது அப்பயிர் ஆயிரம் காலம் வளருமா? முடியாது! வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே ஒரு தற்கொலை முயற்சி. இதற்குப் பின் இல்லறத்தில் இன்பம் தேட முயல்வது சாக்கடையில் மீன் பிடிக்க முயல்வது போன்ற செயலாகும்.

'மனித நாகரீகத்தின் அடித்தளம் இல்லற தர்மம் தான்' சந்தேகமில்லை ஆனல், அந்த ஏழு நாட்கள் திரைப்படத்தில் எந்த ரீதியில் அவள் இல்லற வாழ்க்கைக்கு அனுப்பப்படுகின்ருள்? அவள் அவ்வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளவில்லை, மாருக பலாத்காரமாக ஏற்றுக் கொள்ள வைக்கப்படுகிருள். தனது காதலனுடன் வீட்டை விட்டு வெளியேறியவளை ஐம்பது பேர் முன்னிலையில் பலவந்தமாக இழுத்து வந்து தாலியைக்கட்டி விட்டு 'தாலி பெண்ணுக்கு வேலி' இது எமது பாரம்பரியம், old is gold என்பது தமிழ் கலாச்சாரத்திற்கே வெட்கக்கேடாக தோன்றவில்லையா?

காதலுக்குசிறப்பானவரைவிலக்கணத்தை கூறும் விமர்சகர் ஏன் அதை நிஜ வாழ்க்கையில் பிரயோகப்படுத்த தயங்குகிருர். எனது கருத்துப்படி டாக்டராக வருபவரின் பாத்திரம் நியாயமானதும் வரவேற்க கூடியதானதுமாகும்.

கிறீஸ்தவ திருமணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் குருவானவர் கேட்கிருர் 'எவ்வித வற்புறுத்தலுமின்றி நீங்கள் திருமணத்திற்கு உடன் படுகிறீர்களா?' இந்த கேள்வியை அப் படத்தில் புகுத்தியிருந்தால் பாக்கியராஜ் எவ்வாறு விளக்கம் கொடுத்திருப்பார்? சிக்கலான விடயம்.

எனவே எனது கருத்துப்படி 'தாலி பெண்ணுக்கு வேலி' ஏற்

—53ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணை

உறவு, நட்பு, தொடர்பு இதுவே மனித வாழ்வின் இயல்பு. மனிதன் தனித்துவாழும் தீவாக, துணையில்லாத தனிமரமாக இருக்கவே முடியாது. கூண்டுக் கிளி நீண்டநாள் வாழ்வதில்லை. அதேபோல் தனிமையான வாழ்வு தளர்ச்சியான சாவாக முடிந்து விடும் எனவே,

''விண்ணிற்கு மண்வேண்டும்
கண்ணிற்கு ஒளிவேண்டும்
கடலுக்கு அலை வேண்டும்
மனித வாழ்விற்குத் துணை
வேண்டும்''

ஆம் உறவு, நட்பு, தொடர்பு, துணை என்ற மனித வாழ்வின் அடிப்படையினைச் சித்தரிக்கும் படமே துணை. அவன் (சிவாஜி) ஒரு அரசாங்க ரெஜிஸ்டார். இளம் வயதில் அருமைத் துணை வியை இழந்தவன். தன் வாழ் வின் ஒரே பற்றுக் கொடான தன் மகனை அன்போடும், பொறுப்போடும் வளர்க்கின்றான் இளைஞன் அவன் அதற்குரிய தன் மையோடு, தன்னோடு பணிசெய் யும் ராதா என்ற பெண்ணைக்காத லித்து தந்தையின் விருப்பத்திற்கு எதிராக அவளைத் திருமணம் செய்கின்றான். வாழ்க்கையில் தனது ஒரே பிடிப்பான மகனும் தான் கீறிய கோட்டைத்தாண்டி தனக்குப் பிடிப்பில்லாத பெண் ணைமணந்து விட்டான் என்ற துயரம் வாழ்வில் தனிமையை, வெறுமையை உருவாக்குகின்றது. விருப்பம் இல்லாத மருமகள் என்றபடியால் அவளது ஒவ் வொரு செயலும், நடத்தையும் அவனுக்கு இருந்த வெறுமையை மேலும் விரிவுபடுத்துகின்றது.

ஆழ்கடலில் முத்தைத் தேடுவ தைப் போல, தன்னை அறிந்து கொள்ளப், புரிந்துகொள்ள அங் கீகரித்து அன்பு செய்யத் துணை ஒன்றைத் தேடுகின்றான். கல் லோடு கல் உராய்கின்ற போது தான் நெருப்புவருவதைப்போல, மலரோடு மலர் மோதும்போது மகரந்தச் சேர்க்கை நிகழ்வதைப் போல தனிமையின் துயரங்கள் பெருகுகின்றபோது தான் துணை யின் தேவையும் அவசியமாகின் றது. இவ்வேளையில், அவனோடு பணிசெய்யும் இடத்தில் பரிச்ச யமான பெண்ணொருத்தி தனது வாழ்க்கையில் அன்பும் ஆதங்க மும் காட்டியவள் என்ற முறை யில் அவனுக்குத் துணையாக இருக்க முன்வருகிறாள். எங்கே உண்மையான அன்பும், ஆதர வும், அனுதாபமும் இருக்கிறதோ அங்கே புனிதமான நட்பும், உற வும் தொடர்பும் உண்டு என் பதை இவன் இனம் காணுகின் றான். இங்கேதான் திரைப் படத் தின் கரு பட்டை தீட்டிய வைர மாகப் பிரகாசிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆணுக்கும், ஒரு பெண் ணுக்கும் இயற்கையாகவே ஏற் படுகின்ற காதல் விவகாரத் தையே கருப்பொருளாக வைத்து காலாகாலமாகப் படமெடுத்து அரைத்த மாவையே மீண்டும், மீண்டும் அரைத்த தமிழ் திரைப் பட வானில் இயக்குநர் துரை அவர்களின் துணை 'ஒரு திசை திருப்பம்'

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் சம்பந்தப்பட்ட விவகாரம் ஒரு பாலியல் விவகாரம் மட்டுமல்ல

இந்த செக்ஸ் பிரச்சனையைத் தவிர்த்துக் கூட அவர்கள் நல்ல நண்பர்களாக இருக்கலாம் என் பதை இப்படம் கூறமுற்படுகின் றது.

எங்கே உறவுகளும் தொடர்பு களும் ஏற்படுகின்றதோ, அங்கே உரசல்களும். உராய்வுகளும் ஏற் படத்தான் செய்கின்றது. மாம னுக்கும், மருமகளுக்கும் ஏற் பட்ட உறவுத் தொலைவை சுமுக முறையில் தீர்த்துக் கொள்ளா மல் காழ்ப் புணர்ச்சியுடன் ஒரு வரை ஒருவர் பார்ப்பதும், சுடு சொற்களால் ஒருவரை ஒருவர் தாக்குவதும், ஏற்கனவே இருந்த உராய்வுகளை விழுப்புண்களாக்கு கிறது. பிரச்சனைகள் வளர்வதற் குப் பிழையான வழிநடத்துத லும் ஒரு காரணம் என்பதைப் படத்தில்வரும் ராதாவின் தோழி வெளிப்படுத்துகின்றாள்.

தந்தை எவ்வளவுதான் தனது ஆசைகளையெல்லாம் கொட்டி மகனை அன்பு செய்து வளர்த் தாலும் அவன் தன்னெண்ணப் படி நடக்கவேண்டுமென்று எதிர் பார்ப்பது தற்கால சமுதாயத் திற்கு ஏற்காத ஒரு பழமைவாத மாகும்.

இளம்பெண் ஒருத்தி குடும்பத் திற்கு உழைத்துப்போடுவதற்காக வேலைக்கு போவதால் அவளுக்கு ஏற்படுகின்ற உள்ளுணர்வுப் போராட்டங்களையும், சமூக தாக் கங்களையும் கூட துல்லியமாகக் கூற முற்படுகின்றார் துரை அவர் கள். எனினும், பல கட்டங் களில் படம் சோடை போகத் தான் செய்கின்றது. V. K. ராம சாமியின் குடும்ப வாழ்வு—குறிப் பாக இரண்டு மனைவிமாருக்கி டையில் அவர் படுகின்ற பாடு, அங்கே பேசப்படுகின்ற வார்த் தைகள் தரக் குறைவாக இருக் கின்றன. இப் படத்திற்கு இப் படியொரு காட்சி தேவைதானு என்ற கேள்விக் குறியும் எழுகின் றது. பொதுவாகப் பாடல்கள் எதுவும் மனதில் பதியக் கூடிய தாகஇல்லை. தற்செயலாகப் புகுத் தப்பட்ட சி. ஜெயராமனின் "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்ற பாடல் பொருத்தமாக இருக்கின்றது. படத்தில் நடிகர் திலகம், சரிதா, ராதா என்போ ரின் நடிப்பு பாராட்டக்கூடியது.

பசி, ஒரு வீடு, ஒரு உலகம் போன்ற நல்ல படங்களை உரு வாக்கிய துரை அவர்களின் மற் றுமொரு சிறந்த படம் துணை

விமர்சகர்:

ஜெரேம் லம்பேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இடையூறுகள் தகர்த்தெறியப்பட வேண்டியவை"

— யோ. லொயிட்சன் முல்லைத்தீவு

மனிதனுகப் பிறக்கும் ஒவ்வொரு சிறப்பு விலங்கிற்கும் வாழ்க்கையில் ஏதாவது ஒரு உயர்ந்த இலட்சியம் வேண்டும். மேலும் அதை அடைவதற்கு தளராத உள்ளமும் தன்னம்பிக்கையும் வேண்டும்.

ஒவ்வொரு அன்னையும் மகவை ஈன்றெடுக்கும் போது அவர்களுக்கு அன்று தொட்டே இலட்சியப் பாதைக்கு வழிவகுக்கிருள். அன்றேல் அவன் சுய மனிதனுக நடமாடும் போது தானே இலட்சியத்தை வகுத்துக் கொள்கிருன். மனிதன் தனக்கென்று ஓர் இலட்சியத்தைக் கொண்டு வாழவில்லையென்ருல் அவன் துடுப்பு இல்லாத படகில் பிரயாணம்செய்து கொள்வதற்குச் சமன். இவனிடம் தன்னம்பிக்கையே இராது. ஆகவே இவன் ஓட்டைப் படகில் தான் பயணம் செய்வான். இடையில் அவன்போகும் இடமே தெரியாது.

வரலாற்றில் முக்கியத்துவம் படைத்த சிலரை நோக்கினுல் காந்திஜீ என்ன செய்தார்? அவருடைய இலட்சியதாகம் என்ன? பலமுறை சிறை சென்றும் அவருடைய சுதந்திர இலட்சியம் அடங்கவில்லை. அவருடைய பாதையில் ஏற்பட்ட தடைகள் எல்லாவற்றையும் தன்னம்பிக்கையுடன் தாண்டினுர், தன்னுடைய கொள்கையை அகிம்சை வழியில் கடைப்பிடித்தார். ஒரு சமயம் தென்னுபிரிக்காவில் இந்திய கறுப்பு இன மக்கள் தென்னுபிரிக்க வெள்ளையின மக்களால் துன்புறுத்தப்பட்டபோது அங்கும் அவர் சுதந்திரத்திற்காகப் போராடினுர். ஆயிரக்கணக்கான உண்ணுவிரதங்களை நடத்தினுர். மனைவியுடன் கூட சிறைவாசம் அனுபவித்து மனைவியையும் இழந்தார். அப்படியிருந்தும் சளைக்காமல் போராடி அகிம்சை வழியில் இந்திய மண்ணிற்கு பெருமையையும் புகழையும் கொடுத்து மகாத்மாவாகி இலட்சியப் புருஷராகத் திகழ்ந்தார் காந்திஜீ அவர்கள்.

வெள்ளையனைப் பாரத பூமியில் நின்று விரட்டியே தீருவதென்று போர்க்களம் புகுந்த ஜான்சி ராணி லட்சுமி பாய் பெண்ணுக இருந்தும் அவருக்கிருந்த இலட்சிய தாகம் எத்தகையது! மிக மிக வரவேற்கத்தக்கது. அவருடைய இலட்சியம் மேலும் தென்னுபிரிக்காவில் காந்திஜீயின் தலைமையின் கீழ் நிற வேற்றுமைக் கொடுமைக்கு எதிராக வெள்ளையருடன் எதிர்த்துப் போராடி மனித உரிமைக்காகக் கடும் சிறை புகுந்து உயிர் துறந்த தமிழ்ப் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியம்மையின் இலட்சிய தாகம் எத்தகையது!

அன்னை திரேசாவின் அன்புப் பணி இலட்சியம் எவ்வளவோ தடைகள் எல்லாவற்றையும் தன்னம்பிக்கையுடன் தாண்டினுள். வெற்றியே அடைந்தாள். 13 வயதில் ஏற்பட்ட இந்த அன்புப் பணி இலட்சிய தாகம் பிரமிக்கக் கூடியது.

இவர்களின் அளவற்ற ஊக்கம், தளர்வற்ற நெஞ்சுறுதி, சளைக்காத உழைப்பு, நேர்மையான வழி இவர்களின் இலட்சியத்திற்கு வெற்றி கொடுக்காமலா போனது?

எமது இலட்சியப் பாதை முட்கள் நிறைந்த பற்றைக்காடாகக் காணப்படும்போது அதைப் பூரணமாகக் கடந்து எமது இலட்சியத்தை அடைவதே எமது வாழ்வில் நாம் காணும் பூரண திருப்தி எனலாம். வாழ்வில் இலட்சியத்தை அடைவதே வாழ்வின் வெற்றியாகும். இவ் வெற்றியில் மன அமைதி மிக்க, முழுமை நிறைந்த மாண்புடைய வாழ்வு கிடைக்கின்றது. இந்த வெற்றிக்குஅடிப்படையாக அமைவது நம்பிக்கையே. யானையின் பலம் தும்பிக்கையில் உள்ளது போல மனிதனின் பலம் நம்பிக்கையிலே உள்ளது.

இந்த நம்பிக்கையைக்கொண்டு மனிதனது மாண்பை அழிக்கக் கூடிய கோழைத்தனத்தை, அவநம்பிக்கை என்னும் கொடிய நோயை குழிதோண்டிப் புதைத்துவிட வேண்டும். நம்பினுல் நலம் பெறலாம் என்னும் கொள்கையை மனதில் அத்திவாரமிட்டு இலட்சியப் பாதையைத் தொடர வேண்டும். அப்போதுதான் நமது வலிமை வெளிப்பட்டு இலட்சியப் பாதையின் இருள் அகன்று ஒளி விடுத்து விரிவடைகின்றது.

வாழ்வின் வெற்றியாகிய இலட்சியப் பீடத்தையடைய நமது சிந்தனை ஆற்றல் சிறப்பிக்கப்பட வேண்டிய தொன்று. அது நமக்குப் பிறப்பைத் தரும் ஒன்ருகவும் அமைகின்றது என்று பேரறிஞர் அரிஸ்ரோட்டல் கூறுகின்ருர். எமது இலட்சியப் பாதையில் தோல்விகள் குறுக்கிட்டாலும் சோர்வு எண்ணங்கள் எழுந்தாலும் எடுத்த முயற்சியை இடைவிடாது தொடர்ந்து பல படிகளைத் தாண்டி மனவலிமையுடனும் நம்பிக்கையுடனும் முன்னேறும்போது எமது இலட்சியம் ஆகிய வாழ்வின் வெற்றியை அடைய முடிகின்றது.

எம் வாழ்க்கை இலட்சியப் போக்குடையதாக அமைய வேண்டும். அதற்கான இடையூறுகள் தகர்த்தப்படவேண்டும் மேதைகளின் இலட்சியப்போக்கு மாணவர் சமுதாயத்திற்கு வழி காட்டியாகக் காணப்படவேண்டும். நம்பிக்கையுடன் முன்னேறுவீர். வெற்றி நிச்சயம் தோல்வியைக் கண்டு பின் வாங்காதீர். வெற்றி நிச்சயம்

---

49ம் பக்கம் தொடர்

றுக் கொள்கிறேன். ஆனுல் தாலிக் கயிறு தனது நிலையை விட்டு இறங்கி பலவந்தமாக திணிக்கப் படும்போது தாலி பெண்ணுக்கு வெறும் நூல் வேலிதான். ஆம் ஒரு பெண்ணின் முழுமையான இன்பகரமான இல்லற வாழ்க்கைக்காக அது புதுப்பிக்கப்படலாம். 'எமது பாரம்பரியங்களும், சடங்குகளும் எமக்கே குழிதோண்டுவதை தவிர்த்துக் கொள்ளல் சிறப்பாகும்.

— ர. ஜெ. கொன்ஸ்டன்ரைன் பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் ஒருமைப்பாடு வெற்றியின் சின்னம்

செல்வி நீற்ரு குணநாயகம்

உன் மனத்தைச் சில வேளைகளில், சில சந்தர்ப்பங்களில், சில இடங்களில் ஒன்று படுத்தி, ஒரே நோக்குடன் செய்யும் வேலையிலோ, காரியத்திலோ ஆழமாகப் பதியவைக்கத் தெரிந்து கொண்டால் நீ இந்த உலகத்தில் சாதிக்க முடியாதது ஒன்றும் இல்லை. இருக்கவும் முடியாது. இறைவனை வழிபடும் ஆலயத்தில் நீ இந்தப்பழக்கத்தில் தேர்ச்சி பெறலாம். அந்த இறைவனின் இருப்பிடம் உன் மன ஒருமைப் பாட்டிற்கு ஏற்ற அமைதியையும், சுற்றுடலையும் உருவாக்கித் தருகிறது. இந்த ஆலய ஒருமைப் பாட்டை நீ உன் வீட்டிலும், பாடசாலையிலும், நீ வேலை செய்யும் தொழிற்சாலைகளிலும், கடைப்பிடிக்க முயற்சித்தால் வெற்றி உனதே.

நீ இப்போது படித்துக் கொண்டிருக்கும் மாணவன். படிப்பிலே உன்மனம் ஒருமைப்படாவிட்டால் நீ உன் குறிக்கோளை அடைய முடியாது. எந்த விடயத்தைப்பற்றிப் படிக்கிருயோ அவற்றை உன் மனம் ஆராய வேண்டும். அப்போதே அதன் விளக்கத்தை, உண்மையை, தத்துவத்தை, பிரயோசனத்தை உணர முடியும். அப்போதுதான் நீ படித்த பொருள் உன் மனதில் ஆழமாகப் பதியும். படிக்கும்போது மட்டும் அல்லாமல் எந்த ஒரு வேலை செய்யும் போதும் உன் மனஒருமைப்பாடு அவசியம். இல்லையேல் உன் முயற்சி பூரணமாகாது. பெருமை தராது. வெற்றியை அணுகாது.

பாடகர் சங்கீதத்தோடும். பாட்டோடும் மனதை ஒருமைப்படுத்த வேண்டும். ஆடுபவன் தாளத்தோடு தன் மனத்தையும், உடலையும் ஒருமைப்படுத்த வேண்டும். சேர்க்கஸ் விளையாட்டுக்களில் ஒற்றைக் கயிற்றில் நடப்பவர்கள், சங்கிலியில் சைக்கிள் ஓடுபவரை நீ கண்டு அதிசயப்பட்டிருக்கக் கூடும். 'ஏன்?' 'எப்படி?' என்ற வினுக்கள் உன் உள்ளத்தில் எழுந்திருக்கக் கூடும். அவர்கள் தங்கள் மனத்தையும், தேகதசைகள் ஒவ்வொன்றையும் ஒருமைப்படுத்தி வெற்றியே தங்கள் குறிக்கோள் என்ற ஒரே நோக்குடன் அந்த ஒற்றை சங்கிலியிலும், ஒற்றைக் கயிற்றிலும் நடமாடப் பழகி விட்டார்கள். நீயும் செய்யும் ஒவ்வொரு வேலையில் மனதைப் பதியவைக்க இன்றிலிருந்தே பழக வேண்டும். அப்போது, இளைஞனே எதிர்காலம் உன்னுடையதே.

மனதை ஒருமைப்படுத்தப் பழகியவர்களே இன்று பெரிய விஞ்ஞான விற்பன்னர்களாகவும், சிறந்த சிற்பிகளாகவும், நாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக் கலாமணிகளாகவும், சங்கீத மேதைகளாகவும், புகழ் பெற்ற போர்வீரர்களாகவும், ஒலிம்பிக் பந்தய வீரர்களாகவும், தேசத்தின் தீரர்களாகவும் விளங்குகிறார்கள். உலக சரித்திரத்தில் இடம் பெற்றவர்களும், உலக சரித்திரத்தை உருவாக்கியவர்களும் தமது தொழில் முயற்சியில் மனதை ஒருமைப்படுத்தியவர்கள் தாம்: உலக ஏழைகளின் நண்பன் லெனின், அமெரிக்க சுதந்திர புருஷர் ஆபிரகாம் லிங்கன், ஆங்கில வெற்றி வீரர் வின்சன்ற் சேச்சில், இந்திய இரத்தினம் சுதந்திர மகான் காந்தி, இலங்கைத் தமிழரின் அன்புத் தந்தை செல்வா. இந்த மாகன்களின் வாழ்க்கை வரலாற்றை நீ படித்திருப்பாய் அல்லாவிடின் மற்றவர்களின் மூலம் அறிந்திருப்பாய். இவர்கள் எல்லோரும் தங்கள் சிந்தனையை சிதறவிடாது மன ஒருமைப்பாட்டுடன் வேலைகளைச் செய்தவர்கள் என்று அறிகிறோம்.

ஒருமைப்பாட்டின் வெற்றியை மகா பாரதத்தில் ஒரு நிகழ்ச்சி நன்கு காட்டுகிறது. துரோணர் அரசகுமாரர்களுக்கு வில்வித்தை கற்பிப்பதற்கு முன், ஒரு பரீட்சை நடாத்தினர். ஒரு மரத்தின் கிளையில் துணியால் செய்த ஒரு பறவையை வைத்தார். பின்பு தருமர், அர்ச்சுணன் முதலான எல்லா மாணவர்களையும் தனித் தனியே வரச் சொன்னர். தருமர் அம்பும் - வில்லும் கொண்டு வந்தார். அவர் அம்பை எய்வதற்கு முன், துரோணர் அவரிடம் ஒரு கேள்வி கேட்டார், ''தருமா நீ, அந்தப் பறவையை எய்து விழுத்த வேண்டும். அதற்கு முன்னம் உனக்கு என்ன என்ன தெரிகின்றன'' என்று கூறு. தருமர் கூறினர்: ''ஆசிரியரே, தங்களையும் அந்த மரத்தையும் குருவியையும், அதோ நிற்கும் எனது சகோதரர்களையும் நான் பார்க்கிறேன். என்றன்.

துரோணர் தருமரை அம்பு எய்ய விடவில்லை. இப்படியே துரோணர் கேட்ட அந்தக் கேள்விக்கு மற்றவர்களும் இதே பதிலை சொன்னார்கள். ஆனல் அர்ச்சுணன் சொன்னன் 'ஆசிரியரே, எனக்கும் குருவி கூடத் தெரியவில்லை, அந்தப் பறவையின் கழுத்து மட்டும் தெரிகிறது'. ''விடு அம்பை'' என்றார் துரோணர். அம்பு பறவையின் கழுத்தில் பட்டு அந்தப்பறவை விழுந்தது. கையில் அம்பையும் வில்லையும் எடுத்த அர்ச்சுணன் துரோணரையும், மரத்தையும் மற்றவர்களையும் காணவில்லை. அவனது மனம் ஒருமைப்பட்டு தனது குறியான அந்தப்பறவையிலேயே இருந்தது. ஆகவே அவன் வெற்றியும் கண்டான்.

இளமைச்செல்வங்களே, நீங்களும் செய்யும் வேலையிலும் எடுத்த குறிக்கோளிலும் உங்கள் மனத்தை அப்படியே பதிய வையுங்கள். நீங்களும் உங்கள் வாழ்க்கையில் வெற்றி வீரரர்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி

## இலக்கம் 12

6 × 6 சதுரங்கள் ஆகுமாறு சதுரங்கள் அமைக்க.
இடமிருந்து வலமாக 1 தொடக்கம் 36 வரை இலக்கங்களை எழுதுக.
அடைக்கவேண்டிய சதுரம் இல. 9.

**இடமிருந்து வலம்:-**

1. இவ்விதழின் கரு இதுவாகும்.
25. வன்செயல்களை ........ ...... செய்வதில் பெரியோர் பின் வாங்கமாட்டார்கள். (ஐந்து எழுத்துக்கள்)

**வலமிருந்து இடம்:-**

12. குறுக்கெழுத்துப் போட்டிகளில் வருகின்ற சொல் ...........

**மேலிருந்து கீழ்:-**

1. ஒரு இலட்சியத்தை அடைய முற்படுகையில் பல ............ குறுக்கீடுகள் வருவதுண்டு.
4. ஒவ்வொருவர் வாழ்விலும் அன்புதான் ............ அமைய வேண்டும்.
5. அறிஞர்களால் வளர்க்கப்பட்ட இது இங்கு குழம்பிக் கிடக்கிறது.
15. இது பெற பல்கலைக்கழகம் சென்ற சிலர் இடையில் திசை மாறுவதுண்டு.

**கீழிருந்து மேல்:-**

32. கடமையோடு சேர்ந்த இது இல்லாததால் பல இளைஞர்கள் தடுமாறுகிறார்கள். (5 எழுத்துக்கள்)
36. அ'வில் ஆரம்பிக்கின்ற இது தலை கர்வம் எனப்படுகிறது.

முடிவுத் திகதி: 5-1-1984

பரிசு: ஓராண்டு "நான்"

JAFFNA MEDICAL MUSEUM
TEACHING HOSPITAL JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள்

### இலக்கம் 11

இடமிருந்து வலம் :-

1. கைதிகள் 25. தர்மர்
33. கடவுள் 11. தேன்

மேலிருந்து கீழ் :-

1. கை கொடுத்தல் 2. திராவிடர்
3. கர்வம் 6. கன்னம்
11. தேன் நிலவு

கீழிருந்து மேல் :-

16. அவள் 33. கமம்
34. இடர்

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :

**வே. எமில் ஜெகதீஸ்**
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## பேனு நண்பர்

மனிதன் ஒரு தனித் தீவு அல்ல. ஏனையவர்களுடன் தன் உறவை ஏற்படுத்துவதிலேயே அவன் வளர்ச்சி பெறுகின்முன். உறவு வளரத் தொடர்பு வேண்டும். நீங்களும் பல நண்பர்களைச் சேர்த்துக் கொள்ள, உங்கள் அறிவுகள் அனுபவங்களைப் பகிர்ந்து உறவில் வளர 'பேனு-நண்பர்' தொடர்பு மிகவும் சக்தி வாய்ந்த ஊடகமாகும். இளையோர் வளர்ச்சியையே என்றும் ஆசிக்கும் 'நான்'-'பேனு-நண்பர்' பகுதியை புதிதாக ஆரம்பிக்கின்முன்.

நண்பர் வேண்டியவர்கள் செய்யவேண்டியவை:

1. உங்கள் பெயர், முகவரி, பொழுதுபோக்கு ஏனைய தகவல்கள் என்பனவற்றையும்
2. 6 X 50 சதம் பெறுமதியான முத்திரைகளையும்
3. விரும்பியோர் உங்கள் புகைப்படப் பிரதி (கறுப்பு-வெள்ளை) ஒன்றையும்

'நானில்' பிரசுரிக்க அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் பூங்கா

### பாராட்டும் அனுதாபமும்

புரட்டாதி-ஐப்பசி 83 இதழில் வெளியான "பலவீனமே மனிதனுகின்றது" என்ற கதையை எழுதிய நண்பன் கொன்ஸ்ரன்ரைன் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைக் கூறுவதுடன் உண்மையில் அவரது வாழ்க்கையில் அவர் தோல்வியுற்றிருந்தால் அவருக்கு எனது அனுதாபங்களையும் தெரிவிக்கிறேன்.

— செ. அல்பிறட்
யாழ். வளாகம்

### சோதனையான விளம்பரம்

இறுதியாக 'நான்' கொண்டு வந்த 'மகிழ்ச்சி' இதழை வாசித்தேன். வாழ்க்கைக்கு வேண்டிய பல நற்கருத்துக்கள் கண்டு மகிழ்வடைந்தேன். ஆனுல் இறுதி அட்டையைத் திருப்பியதும் பீடி விளம்பரம் கண்டு வெறுப்படைந்தேன் ஏனெனில் இன்றைய இளைஞர்கள், யுவதிகள் பலர் விரும்பிப் படிக்கும் இத்தகைய உளவியல் மஞ்சரி மூலம் புகையின்பம் பெறப் பாவிக்கவேண்டிய பொருட்களை அறிமுகப்படுத்துவது ஒரு சோதனையாகாதா?

— ச. றெ. கொன்ஸ்ரன்ரைன்
புனித மடுத்தீனுர் குருமடம்

### வித்தியாசமான கோணம்

சினிமா மோகம் கொண்டு அலையும் இக் கலியுகத்தில் கொலை, கொள்ளை, சினிமா நடிக நடிகையர் பற்றிப் பிரசுரித்துக் கொள்ளை லாபந் தேடும் பத்திரிகைகளையே பார்த்துள்ளேன். தற்செயலாக ஒரு நூல் நிலையத்தில் கிடைத்த "நான்" ஒரு வித்தியாசமான கோணத்தில் இருப்பதைக் கண்டு என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. "நான்"ஐ மேலும் விரிவாக்குங்கள். சஞ்சிகையில் உள்ள ஒவ்வொரு வரியும் இன்றைய நவநாகரீக மக்களை மனிதர்களாக, தெய்வங்களாக ஆக்கும். தியாகம் வாசித்தேன். ஏன் நானும் தியாகம் செய்து பிறர்க்காக வாழக்கூடாதா என்ற அவா எழுந்துள்ளது.

— எஸ். ஐங்கரன்
வட்டக்கச்சி ம. வி.

### உரிமைக் கண்டனம்

கடந்த இரு வருடங்களாக "நான்"ஐ விரும்பிப் படித்துப் பயன்பெறும் வேளையில் அதன் தரம் முன் போல் இல்லாதிருப்பதைச் சுட்டிக் காட்டும் பொறுப்பும் எனக்கு உண்டு. சிறுகதைகளும் விவாதங்களும் எந்த அர்த்தமும் இல்லாமல் அரைத்த மாவை அரைப்பது போல் இருக்கிறது. முன்பு வெளியாகி மனதைக் கொள்ளை கொண்ட, மனப்பாடமாகத் துடித்த கவிதையின் பாணியில் எழுத முயன்று தோற்றதை "உன் மகிழ்ச்சியும் என் மனமும்" கவிதை காட்டுகின்றது.

— எஸ். ஶ்ரீரஞ்சனி
தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org